REGD. M 4045

# திராவிடநாடு

விலை அணா 2 ஆண்டுசந்தா ரூ 7 இலங்கை 15 சதம் வெளிநாடு 12 அணா

மலர் 7 | 27–2–49 | இதழ் 35

# ★ சனாதனச் சர்ச்சில்கள் ★

"இலங்கையிலும் மதச்சார்பற்ற சர்க்காரே நடந்துவருகிறது. ஆயினும், அந்தச் சர்க்கார் மதங்களுக்கெதிர் சட்டம் இயற்றவில்லையா? இலங்கையில் எத்தனையோ பௌத்த ஆலயங்கள் இருக்கின்றன. அவை களில, கண்டி, அநுராஜபுரம், பொலன்னருவை, களனி ஆகிய இடங்களிலுள்ள பௌத்த ஆலயங்களில் எத்தனையோ கோடி ரூபாய்க்குமேல் மதிப்பிடக்கூடிய நவரத்ன ஆபரணக் குவியல்களும், ஏராளமான சொத்துக்களும் இருக்கின்றன. அவை களைப்பரிபாலிக்க சர்க்கார், பௌத்த மதபரிபாலனச் சட்டம் என்று ஒரு சட்டத்தைத் தயாரித்து அமுல் நடத்துகிறார்கள். இதனால் பழைய பெருச்சாளிகள் உள்ளே நுழைய முடியாமல் நிர்வாகமுமெதிர்பார்த்தபடி வெகு சிறப்பாக நடந்து வருகிறது. இனிலு இந்தச்சட்டத்தை இதுவரை எவரும் எதிர்க்கக்காணோம். அதற்குப்பதிலாக இலங்கை இந்துக்கள் இதேபோல் 'இந்துமத பரிபாலன சட்டம்' என்று ஒரு சட்டத்தை சர்க்கார் தயாரித்து உடனே அமுல் நடத்தவேண்டுமென்று கடந்த 1948-ம் வருஷம் இலங்கையில்சைவ சமாஜ மகாநாட்டில் ஏகோபித்துத் தீர்மானித்திருக்கிறார்கள்.

* * *

லோகோபகாரி எனும் இதழ் இத்தகவலைத் தருகிறது. இலங்கையில் பௌத்தர்களுக்கு அந்நாட்டுச்சர்க்கார், தங்கள் தேவாலயங்களை நிர்வாகம் செய்ய முன்வந்திருப்பது. அக்ரமம் என்றோ அதனால் மதம் ஒழிந்துபோகும் என்றோ எண்ணம் எழவில்லை. மதத்திலே மக்களுக்குள்ள மட்டற்ற பற்றினைப் பயன்படுத்திக்கொண்டு, வேஷதாரிகளும் சுரண்டிப்பிழைப்போரும் சுகபோகவாழ்வு நடத்துகிறார்கள் — முடிகிறது — இந்த அநீதியைத் தடுப்பதே மக்களிடமும் மதத்திடமும் உண்மையான பற்றுகொண்டவர்களின் நோக்கமாக இருக்கவேண்டும் என்பதை அங்கு மக்கள் உணர்ந்துகொண்டனர். அங்கு எதிர்ப்பு இல்லை — காரணம் அங்கு, 'கோயிற் பூனைகளை' காப்பாற்றிக் கொழுக்கச்செய்ய இந்நாவு மித்திரனும், இல்லை! எல்லா நாட்டிலும் மத ஏகாதிபத்யம் உண்டு — ஆனால் இதிலே பிழைப்பையும் உயர்வையும் பிணைத்துக்கொண்டுள்ள ஒரு குலம் கிடையாது. நமது நாட்டில் மட்டுந்தான் அப்படி ஒரு குலம் இருக்கிறது. அந்தக்குலத்துக்கு, மக்களை மடைமையில் ஆழ்த்திவைக்கும் திறனும் சாதனமும் இருக்கிறது — எனவேதான், எதிர்ப்புக்காட்டமுடிகிறது. கந்தலாடையுடன் நடுங்கும் குரலுடன் ஓடைப்பக்கம் நடப்பதைக் கண்டால் பஞ்சையை, விரட்டி அடிக்கும் வீட்டுக்காரர், அழுக்கேறாத காவி உடையும், அழகிய வெண்ணீறும், காதிலும் கழுத்திலும் உருத்திராட்சமும் கையிலே பிக்ஷாபாத்திரமும் கொண்டு, உரத்தகுரலில், சதாசிவத்தை முதலில் கூப்பிட்டுவிட்டு, பிறகு, "இந்தக் கட்டைக்கு ஏதேனும்பிச்சை" என்று 'அம்மணியை' அழைக்கும் ஆர்ப்பாட்டப் பண்டாரத்தை, சற்று மரியாதையுடன்தானே "போய்வா, சாமி" என்று கூறுகிறார். கோயிற்பூனைகள் இன்று கொண்டுள்ள கோலம் மக்களை மயக்கக்கூடியவிதமானது. எனவேதான், இலங்கையிலே எளிதிலே நிறைவேற்ற முடிந்ததை இங்கு நிறைவேற்றுவதற்கு, கஷ்டப்பட வேண்டி வருகிறது.

• • •

"பல்லவ மன்னனுக்கு சேனாபதியாக இருந்த பரஞ்சோதி என்பவர் வாதாபியிலிருந்து கணபதி விக்ரகத்தைக் கொணர்ந்து தம் சொந்த ஊரான திருச்செங்காட்டங்குடியில் நிறுவியிருக்கிறார்"

இந்தத்திங்கள் துவக்கத்திலே, தினசரிமடல் இந்தத் தகவலை வெளியிட்டிருக்கிறது.

விநாயகர், பிள்ளையார், என்றுபல பெயர்களால் அழைக்கப்பட்டுப் பூஜிக்கப்படும், கணபதி தமிழ்நாட்டுக்குரிய தெய்வமல்ல, பழந்தமிழர்கள் அவ்விதமான ஒருகடவுளை, வணங்கினதில்லை. மிக மிகப் பிற்காலத்திலே வடநாட்டிலிருந்து இங்கு வந்து புகுந்த வழக்கம் இது, என்று நாம் கூறினபோது, கணபதியைக் குறை கூறுகிறான் கயவன்! பிள்ளையாரைப் பிழைபடப் பேசுகிறான் பாபி! விநாயகரைத் திட்டுகிறான் விதண்டாவாதி! என்று நிந்தித்தவர்கள் எவ்வளவு பேர். பெரிய

ஆராய்ச்சி நடத்திவிட்டாலும் ஆராய்ச்சி, யுக யுகமாக இருந்து வரும் கணபதியை, தமிழ்நாட்டுக்குரிய தெய்வமல்ல என்று கூறுகிறான் அறிவிலி! என்று ஆத்திரத்துடன், பேசினர் பலர்.

இப்போது என்ன சொல்வார்களோ, தெரியவில்லை தினசரி வெளியிடும், ஆராய்ச்சியைக் கண்டு!

வாதாபியிலிருந்து கணபதியைக் கொண்டு வந்தார் பரஞ்சோதி என்று தினசரி தெரிவிக்கிறது. வாதாபி என்பது சாளுக்கிய ராஜ்யத்தின் தலைநகரம் — இப்போதைய பம்பாய் மாகாணத்திலிருப்பது. வடநாட்டுச் சரக்கு, விநாயகர், என்பதை இனியும் மறுத்துக்கூறுவரா, நம்மை மதியிலிகள் என்று பேசிய மகாபண்டிதர்கள்.

* * *

வருணஜெபம் செய்தால் மழை வரும் என்று நம்புவது ஏமாளித்தனம், என்று நாம் கூறினால் வைதீகர்களின் முகம் சுளிக்கிறது, மனம் குமுறுகிறது. ஆலயங்களிலே ஊழல்கள் மலிந்து கிடக்கின்றன, என்று சொன்னால் அவர்களின் கோபம் கட்டுக்கடங்கா நிலையாகிறது. நம்மைப் பிய்த்து எறிந்துவிடுவதுபோல் கிளம்புகிறார்கள்! — ஆலயங்களிலே உள்ள பூசாரிகள் ஆஷாடபூதிகள் என்று நாம் கூறிவிட்டாலோ, அரகரா சிவா சிவா! அடபாவிப்பயலே நாக்கு அழுகுமடா! என்று ஆத்திரமாகப் பேசுகிறார்கள்.

வருணஜெபம் செய்வது ஏமாளித்தனம் — ஆலயங்களிலே ஊழல்கள் உள்ளன — அங்குள்ள பூசாரிகள் ஆஷாடபூதிகள் — எனும் இம்மூன்று உண்மைகளையும், கூறுவது நம் ஏடல்ல, இந்துஸ்தான் எனும் இதழ் ஒப்புக்கொண்டு செப்புகிறது: இதோ, அதன் வாசகம்!!

“நாட்டிலே விளைச்சல் இல்லை—விளைச்சலை அதிகரிக்க நீர்ப்பாசன வசதிகளை சீர்திருத்தத் திட்டமான முயற்சி எதுவும் காணோம். ஆனால் ஊழல் நிறைந்த ஆலயங்களில், ஆஷாட பூதிகளான பூசாரிகளைக் கொண்டு வருணஜெபம் செய்யச் சொல்கிறார் பிரதமர்”

இவ்விதம் கேலிசெய்கிறது, இந்துஸ்தான். இந்தச் சொல்மாலை நமக்குக் கிடைக்கும்போது, நாம் ஏன், கருத்தறியாக்கயவர் தரும் கல்மாரியையோ, வகையறியா வக்கிரர்கள் தரும் வசைமாரியையோ, பொருட்படுத்தப் போகிறோம்! நாம் எடுத்துக்காட்டுகிறோம் உண்மையை, முதலில், துணிவுடன் — எதிர்ப்பைத்தான் காண்கிறோம், ஏசுகிறார்கள், இகழ்கிறார்கள் — ஆனால், அடிமேல் அடி அடித்தால் அம்மி நகரத்தான் செய்யும் — ஏசினோரே, பிறகு, வருகிறார்கள் வழிக்கு! அவர்கள் வழிக்கு வருவதுகூடக் கிடக்கட்டும், வேறு முகாம்களிலிருந்துகொண்டு முரசு கொட்டுவோரும், சிற்சில சமயங்களிலே, நாம் கூறும் கருத்துகளை ஆதரிக்கிறார்கள் — அவசியம் பிறக்கிறது. வருணஜெபம் செய்வது ஏமாளித்தனம்! ஆலயங்களில ஊழல்கள் நிறைந்துள்ளன — பூசாரிகள் ஆஷாடபூதிகளாயுள்ளனர், என்பவைகளை நாராயண ஐயங்காரை ஆசிரியராகக் கொண்ட இந்துஸ்தான் நாட்டுக்குக் கூறும்போது, நமக்கு, நாட்டுவளம் அறியாத கிணற்றுத்தவளைகளின் கூச்சலைக்கேட்டு, கோபமா வரும்!! கிடைக்கவேண்டிய இடங்களிலிருந்து ஆதரவும் ஆமோதிப்பும் கிடைத்து வருகிறது, என்ற மகிழ்ச்சியும், அதனால் நம்பிக்கையுமே பிறக்கிறது.

* * *

முற்போக்கான திட்டம், மக்களின் மாண்பை உயர்த்தும் முயற்சி, எதைச்செய்ய முற்பட்டாலும், பார்ப்பனரிடமிருந்து எதிர்ப்புக் கிளம்புவதையே நாம் பார்க்கிறோம். அதனை நாம் எடுத்துக்கூறும்போது, கோபமாகத்தான் இருக்கும் — நம்மை நாசமாக்கவேண்டும் என்று ஆத்திரமாகத்தான் இருக்கும். கொஞ்சம் பல்லைக் கடித்துக்கொண்டு, பொறுமையுடன் இருந்து பார்த்தால், உண்மை விளங்கும். கோயில்களிலே பொட்டுக்கட்டுவது எனும் மடமை ஒழியவேண்டும் என்ற சட்டம் கொண்டுவரப்பட்டது — எதிர்த்தவர் காலஞ்சென்ற சத்யமூர்த்தி ஐயர்! பால்யவிவாகத்தைத் தடை செய்யும் சாரதா சட்டம் வந்தபோது, எதிர்த்தவரும் அவரேதான். பனகல் அரசர் காலத்திலே இந்துமத பரிபாலன சட்டம் கொண்டுவரப்பட்டபோதும் அவர் எதிர்த்தார்! இப்போது மடாலய நிர்வாக மசோதாவை எதிர்ப்பவர், வைத்தியநாதஐயர்! இவைகளைப் பொய் என்று கூறிவிட முடியாது. இந்துவும், மித்திரனும், இந்தச் சந்தர்ப்பங்கள் ஒவ்வொன்றின்போதும் பிற்போக்குக் கட்சியையே ஆதரித்து வந்தன — அவை இரண்டும் பார்ப்பனப் பிரமுகர்களால் நடத்தப்பட்டு வரும் பத்திரிகைகள். இவ்வளவு தெளிவாக உண்மை இருப்பதால் தான் நாம், கூறுகிறோம், முற்போக்கான திட்டத்தை முப்புரியினர் எதிர்த்து வருவதே, குலதர்மமாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று. கோபித்து என்ன பயன்! கொக்கரித்து என்ன இலாபம்! சதி அல்லது உடன் கட்டை ஏறும் வழக்கத்தை ஒழித்தபோது கூடத்தான், மதமே நாசமாகிவிடும், இந்து சமுதாயமே அழிந்துவிடும் என்று பேசினர்! அது அவர்களின் பல்லவி! பொருளற்றது!! நாளாகவாக, நல்லறிவு நாட்டிலே பரவப்பரவ, பகுத்தறிவு மேலோங்கும் நிலையிலே, இந்தப் பொருளற்ற பல்லவியை, இன்று கவனித்துப் பதில்கூறிக் கொண்டிருக்கும் அளவுக்குக்கூட, அவசியம் இராது. ஒரு [illegible] மாட்டு ஜட்காவண்டிக்காரர்களைக் கூட்டி அவர்களிடம் கெஞ்சிக்கூத்தாடி, சமாதானம் செய்து, சம்மதம் பெற்ற பிறகா, மோட்டார் பஸ்கள் ஓட்ட முற்படுகிறார்கள்!! காலம் மாறிக்கொண்டே வருகிறது, அதைத்தடுக்கும் திறன் யாருக்கும் கிடையாது! யூகமிருந்தவர்கள் இதை அறிவர்! மட்டரகங்கள் தங்கள் துயரத்தையும் தோல்வியையும் வெளியே காட்டிக்கொள்ளும் வகையில 'கன்னாபின்னா' வில் இறங்கும். கடைசிக்கட்டம் என்றுதான், அந்நிலைக்குப் பொருள்!!

மதம் நாசமாகும், இந்நாட்டின் மாண்பு மங்கிப் போகும், சமுதாயத்திலே சீர்குலைவு உண்டாகும், சர்வநாசம் சம்பவிக்கும் என்று சாக்குக் கூறிக்கொண்டே, முற்போக்கை விரும்புபவர்களைக் கண்டபடி கண்டித்துப் பேசியும், பாமரர்கள் மனதிலே பீதி உண்டாக்கி அவர்களைக் கிளப்பிவிட்டும், வைதீகர்கள் காணும் பலன் என்ன! சரி, சரி, இவ்வளவு பெரிய ஞானஸ்தர்கள், சத்திய ஜ்வாலை போலக் கோபத்தைக் கிளப்பிவிட்டிருக்கிறார்களே, அவர்களுடைய சாபத்துக்கு ஆளாகக் கூடாதே என்று எண்ணி, எந்தச் சீர்திருத்தச் சட்டமாவது, தடைப்படுத்தப்பட்டு விட்டதா! சாரதா சட்டம் சாஸ்திர விரோதம், பால்ய

விவாகமே, பண்டைய பெருமையை நிலைநாட்டக் கூடியது, பாரத் வர்ஷத்திலே அனாதி காலந்தொட்டு இருந்துவரும் ஆசாரம், ஆகவே, அதனைக் குலைக்கக் கூடாது என்று இருந்துவிட்டார்களோ! இல்லை! வைதீக வறட்டு வாதத்தைக் கண்டு அஞ்சி, எந்தக் காரியமும் நின்றுவிடவில்லை. பெண்களுக்குச் சம உரிமை கிடைக்க, சட்டம்! திருமண முறையிலே, உண்மையிலேயே திருவும் மணமும் இருக்கக் கூடிய விதமான திருத்தம்! பெண்களுக்குச் சொத்துரிமை! விவாக விடுதலைக்கு வழி! இவ்வளவும், வைதீகர்களின் கண் முன்பாகவே, பிறர் காது செவிடுபட அவர்கள் கடுங்கூச்சலிடுவது பற்றித் துளியும் சட்டை செய்யாத முறையிலே, சட்டங்களாகிக் கொண்டு வருகின்றன. சகலதுறைகளிலும், வெற்றி, சீர்திருத்த நோக்கமுடையவர்கள் சார்பாகவே கிடைத்து வருகிறது. எதெதை, இந்துமதத்தின் அடிப்படைத் தத்துவங்கள், ஆணிவேர்கள், இகபரசுகம் தரும் சாதனங்கள், என்று வைதீகர்கள் பேசிக்கொண்டு வந்தனரோ, அவைகளெல்லாம், காலச் சம்மட்டியின் தாக்குதலால், நொறுங்கித் தூள் தூளாகின்றன! இவ்வகையிலே, நாம் விரும்பும் சீர்திருத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, தோல்வித் தொடரை அணிந்து கொண்டுள்ள அசகாயச் சூரர்கள் கிளப்பும் அர்த்தமற்ற அசட்டு அவுட்டுகளைக் கண்டு நாம் கவலைப்படவேண்டிய அவசியமென்ன இருக்கிறது! காலப்போக்கை அறிந்தவர்கள், மதத்திலே உள்ள மாசுகளைத் துடைத்துவிட்டு, மக்கள் மனதிலே பதிந்துள்ள புத்துலகக் கருத்துக்களுக்கு ஏற்றவிதத்தில், இந்துமதத்தைத் திருத்தி அமைத்தாகவேண்டும், என்று முனைந்து பணிபுரிகின்றனர். கோயில் கதவுகள் திறக்கப்பட்டதற்குக் காரணம் மக்களின் அறிவுக் கண்கள் திறக்கப்பட்டுவிட்ட உண்மையைத் தெரிந்துகொண்டதால்தான்! ஜாதிபேதம் குலபேதம், கூடாது என்று பேசுபவர் அதிகமே தவிர, ஜாதிகுல தர்மம் நீடிக்கத்தான் வேண்டும் என்று வாதாடுபவர்களின் தொகையல்ல!! பர்ணசாலைகளிலே வகுக்கப்பட்ட திட்டங்களை வைத்துக்கொண்டு, பாராளும் மன்றங்கள் ஏற்பட்டுள்ள இக்காலத்திலேயும் ஆதிக்கம் செலுத்தலாம் என்று எண்ணுவது அணுகுண்டை வைத்தடுக்க அடுப்புலி டுப்பார்க்கும் அதிமேதாவியின் செயலுக்குச் சமமாகும்! ஆனால், பஜனை மடங்களிலே இருக்க வேண்டிய சில 'பரப்பிரம்மங்கள்', தேசிய முலாம் பூசிக்கொண்டு, பாராளும் மன்றத்திலே புகுந்துகொண்டிருப்பதால், சலசலப்புச் செய்ய முடிகிறது. பல ஜாதிகளாக, இந்து மக்கள் பிரிந்து அதன் காரணமாகப் பிளவு பட்டு, பகைத்துக் கொண்டு வாழ்வதை, பரமனின் திட்டம், பாப புண்யத்தினால் ஏற்படும் பலாபலன்களின்படி அமைந்த திட்டம், என்று எண்ணிக் கொண்டிருந்த காலம் போய் விட்டது — எப்படியோ ஏற்பட்டுவிட்டது, நம்முடைய நாட்களிலே அதனால் கேட்டையும் நாசம் நன்றாகத் தெரிந்து விட்டது. எனவே, அதனை மாற்றிவிடத்தான் வேண்டும் என்பதை மதிபடைத்தவர்களனைவரும் ஒப்புக் கொண்டு விட்டனர். முறை என்ன இந்த மாற்றத்துக்கு என்பதிலே கருத்து வேற்றுமை உண்டு - மூலத்தில் அல்ல—ஆனால் உலகமறியாத சில உதவாக்கரைகள், தங்கள் வார்த்தைக்கு இந்தக் காலத்திலும் ஏதோ மதிப்புண்டு என்று நம்பிக் கொண்டு இருக்கின்றன! கிளி கொஞ்சிடும் சோலையிலே, நடுநிசி வேளையிலே, ஆந்தை அலறுகிறதல்லவா — அதுவும் பாபம், தனது ஆலாபனத்தைக் கேட்க உலகு உவகையுடன் இருப்பதாகவே எண்ணிக் கொள்கிறது! தன குறும்பையும் கோணற் சேட்டைகளையும் கண்டு, உலகு மகிழ்கிறது, என்ற மனப்பான்மை மந்திக்கே இருக்கும்போது, மக்களிலே சிலருக்கு இருப்பதிலே என்ன ஆச்சரியம்! மலர்ச் செடி அருகே புழு நெளிவதில்லையா! மயில் ஆடக் கண்டு, வான்கோழி கூச்சமின்றி ஆடவில்லையா, அதுபோலவே, உலகு அறிவொளி கண்டு, புதுப் பாதையைத் தேடிக்கொண்டு செல்லும் நிலைகண்டும், சில கபந்தங்கள், தமது பழைய போக்கிலே பிரேமை கொண்டுள்ளன! ஞானசாகரம், தங்கள் மனம் என்று எண்ணிக்கொண்டு, பேசிப்பார்க்கின்றன — மதிப்பார் இல்லை—தங்கள் எதிர்ப்புக் கண்டு, சீர்திருத்தப் படை சிதறுண்டு போகும் என்று எண்ணிக்கொண்டு, தூற்றல் பாணத்தைத் துரிதமாகத் தொடுத்துப் பார்க்கின்றன—பலன் இல்லை — மாடாகப் போ! மரமாகப் போ! கல்லாகு! கண்ணிழந்து போ!—என்று சாபம் கொடுக்கக் கூடியகாலமல்ல இது. எனவே சாபம் கொடுப்பதற்குப் பதிலாக, மடையே! மரமே! கல்லே! கபோதி! என்று பலப் பல வசைமொழிகளை வீசிப் பார்க்கின்றன, சீர்திருத்தம் கோருவோர்மீது. வசைமாரி கண்டு, சீர்திருத்த வாதிகள் வருத்தப்படப் போவதில்லை. ஏனெனில், முதலிலே எடுத்துக் காட்டியுள்ளபடி, சீர்திருத்தவாதியின் நோக்கங்கள் ஒவ்வொன்றாக நிறைவேறிக்கொண்டே வருகின்றன, எதிர்பாராத இடங்களிலிருந்துகூட ஆதரவுகள் கிடைத்திடக் காண்கிறோம். சட்டசபைகளிலே, கமிட்டிகளிலே, மந்திரி சபைகளிலே, மதிவாணரின் மன்றங்களிலே, எங்கும், சீர்திருத்த ஆர்வம் இருந்திடக் காண்கிறோம்—களிப்படைகிறோம். கோயில்களிலே காணப்படும் கொடுமைகளை எண்ணி எண்ணி ஏக்கமுற்ற சீர்திருத்தவாதியின் மனம், மகிழத்தக்க முறையிலே இன்று திருத்தங்கள் செய்யமுற்பட்டுள்ளனர். ஆட்சியாளர்கள்! மாதர் தமை இழிவுசெய்யும் மடமை, மக்களில் ஒரு பகுதியினரைத் தீண்டாதார் ஆக்கிவைத்த கொடுமை, மாய்ந்திடக் காண்கிறோம், மனமிக மகிழ்கிறோம்! களஞ்சியத்திலே புகுந்து கொண்டு, தானியத்தைக் களவாடித் தின்று கொழுத்து வந்த எலி, பொறியிலே சிக்கிவிட்ட பிறகு, இரும்புக் கம்பிகளை, தானியத்தைக் கொரித்துத் தள்ளுவதுபோல செய்துவிட முடியாது, என்று தெரியாமல், உயிர் பிழைக்க வேண்டுமே என்பதால், கூண்டுக்குள் இருந்தவண்ணம், குதிப்பதும் கம்பியைக் கடிப்பதும், பலமாகக் கீறுவதும், பலவித முயற்சிகள் செய்வதையும் பார்க்கிறோமல்லவா! அது போன்ற காட்சி, இந்த 'போக்கிடமற்றதுகள்' போடும் கூக்குரலும், ஆடும் கூத்தும்! வெற்றி பெற்று வரும் சீர்திருத்தவாதிகளுக்கு, பொழுது போக்குக்கான, கண் காட்சி—இலவசமாகத் தரப்படுகிறது!!

தேசிய முலாம் கிடைத்துவிட்டதைச் சாதகமாக்கிக் கொண்டுதான், சில வைதீகர்களால், வறட்டு வாதம் செய்ய முடிகிறது.

இந்து—மித்திரன் போன்ற இதழ்கள், இவர்களைத் தூக்கிவைத்து எழுதுவதையும், பணம் பிடுங்கிகளைப் பரமாத்மாக்கள் என்றும், சமூகச் சனியன்களைச் [illegible]

என்றும், ஏமாற்று வித்தைகளைப் புண்ய காரியம் என்றும், எழுதிக் காட்டுவதைக் கண்டு, சிலருக்கு, உண்மையாகவே, மேதைகள் யாரோ, மடாலய நிர்வாக மசோதாவை எதிர்க்கிறார்கள் அவர்களுடன் கூடிக்கொண்டு குலவினால், புகழ் கிடைக்கும், 'பல தானமும்' கிடைக்கக்கூடும் என்று ஏமாளித்தனமாக எண்ணிக்கொண்டு, தங்கள் பழைய பசலிப் பேச்சைப் பொது மக்கள் முன்னாலேயே பேசவும் துணிந்துவிட்டனர். அவர்கள்பட்ட பாடு என்ன! மாயவரத்தில் பிப்ரவரி 16-ந் தேதி மக்களை மன்னார்சாமிகள் என்று எண்ணிக்கொண்டு, சில மகானுபாவர்கள், மடிசஞ்சி இராக ஆலாபனை செய்து பார்த்தனர்—கற்கள் பறந்தனவாம்—செருப்புகளாம்—'ச்சீ' கோஷங்களாம்! முட்டைகளும் கூடத்தானாம்! மூலை முடுக்கிலே இருந்துகொண்டு யாரோ சிலர் செய்த சேட்டையா! அல்ல! பொதுமக்களின் ஆத்திரத்தின் விளைவு! கூட்டத்திலே தமது கண்டனத்தைத் தெரிவித்ததுடன், ஊர்வலமாகச் சென்றதாம் பெருங்கூட்டம், மடத்தைத் தாங்கும் பேர்வழிகளைக் கண்டித்து முழக்கமிட்டுக்கொண்டே!

இந்தவிதமான மாறுதலைக் கண்டு, பொதுமக்கள் சீர்திருத்த ஆர்வம் பெற்றிருப்பது கண்டு, பழைய ஏடுகளைக் காட்டிக் காட்டி நாட்டை ஏய்த்துவந்த காலம் போய்விடுகிறதே என்ற பயம் பிறப்பதும், அதன் காரணமாக மன்னார்சாமிகளும், மடிசஞ்சிகளிலே பட்டர்களும் மாரடித்தழுவதும், சகஜந்தான்! என்ன இருந்தாலும் பாபம், இருக்காதா, ஏக்கம்! மனு மாந்தாதா காலத்திலிருந்து அனுபவித்து வந்த ஆதிக்கம் ஒழிகிறதென்றால், ஏக்கம் பிறக்கத்தான் செய்யும்! இவ்வ காலத்திலே பெற்ற சாம்ராஜ்யத்தை இழக்கவேண்டி வருகிறதே என்று சர்ச்சில் ஓலமிட்டது போல, இங்குள்ள சனாதனச் சர்ச்சில்களும் ஓலமிடுகிறார்கள்! அவர்களின் மன ஆறுதலுக்காகத்தான், பாபம்!!

✱

## கோயிலை

14-ம் பக்கத் தொடர்ச்சி

நீதிக்கு முரணான நிகழ்ச்சிகள், ஆகிடலைகளைக் கொண்ட ஏடுகளை, புண்ய நூற்கள் என்று கொண்டாடி, அவைகளிலே உள்ளவைகளைத் திருத்தி அமைத்துக்கொள்ளவும் திறனற்று இருந்தால், பலன் இல்லை—விளைவுகள் கேடானவைகளாகத் தான் இருக்கும்.

பக்தியுடன் பாடினை — பார்வதி நாயகனையாயினும் சரி, பாற்கடலிற் துயில்வோனாயினும் சரி, துதித்தால் அன்பால் அபிஷேகித்தால், அறநெறி நின்று ஆராதித்தால், அதுவே, அவன் அருளைப் பெறப் போதுமானதாகும், என்ற அரிய கருத்தையும் ஒருபுறம் கூறிக்கொண்டு, பக்தி மேலிட்டதால், பௌத்த புனிதாலயத்தைக் கொள்ளையிட்டார் திருமங்கை ஆழ்வார், அவர் திருவடிகளே சரணம், என்றும், கதைகளைக் கூறி, ஒருசேர, மக்கள் மனதிலே, ஏன், இந்த இருவகை, முரண்பட்ட கருத்துகளையும் போட்டுக் குழப்ப வேண்டும் என்று கேட்கிறோம். கடவுள் சம்பந்தமாகவும், மதசம்பந்தமாகவும், ஏராளமான புராணங்கள் குவிந்து கிடப்பதால், ஏற்படும், மனக்குழப்பம், உண்மையிலேயே, மக்களின் மனதிலே மதத்தைப்பற்றிய தெளிவோ, கடவுளைப்பற்றிய கருத்தோ படிவதற்கு இயலாதபடி செய்துவிடுகின்றன. புராணங்கள் ஏற்படுத்தும் பல கேடுகளிலே, மிக முக்கியமானது இது.

பௌத்தாலயத்தைக் கொள்ளையிட்டாலும் தவறில்லை, திருவரங்கத்துறையாருக்குத் திருப்பணி செய்தாக வேண்டும் என்ற விதமான பக்தி, திருமங்கை ஆழ்வாருக்கு—பூசலார் நாயனாருக்கோ, ஈசனுக்குக் கோயில் கட்டப் பொருள் இல்லை—பிறரைக் கேட்கவும் இல்லை—எங்கு பொருள் இருக்கிறது என்று தேடித் திருமங்கையார் வேலை செய்யவுமில்லை—மனதாலேயே, கோயிலைக் கட்டினார், மனமேவுசிவம் அதிலே குடி புகுந்தார் என்ற விதமான பக்திக்கதை இருக்கிறது — இரண்டும் ஒரே எடை-மதிப்பு-ஏற்றம் புனிதத்தன்மை! இரண்டு கதைகளையும், புண்ய கதைகள் எனப் போற்ற வேண்டும், மக்கள். என்ன கதியாவது அவர்கள் கருத்து! எதைக் கொள்வது, எதைத் தள்ளுவது! ஏன் இந்த வீண்தொல்லை அவர்களுக்கு? விளக்கமாகவும், நடைமுறைக்கு ஏற்றதாகவும், பிறருக்குத் தீங்கோ, மனவேதனையோ மூட்டாதனவுமான, முறையைக் கூறிவிடக் கூடாதா—மக்களும் தெளிவு பெறுவர்—மார்க்கமும் மாண்பு பெறுமே! நல்வாக்குக் கொடுக்கும் குடுகுடுப்பைக்காரன் பலவித வர்ணமும் வகையும் கொண்ட, பல துண்டுத் துணிகளை ஒட்டித் தைத்து, அணிந்து கொண்டுள்ள சட்டைபோலாகிவிட்டது, மார்க்கத்தைப் பற்றி மக்கள் முன் வைக்கப்பட்டுள்ள, புராணக்கருத்துரை! எதைப் பின்பற்றுவது என்பதறியாமல் திகைக்கிறார்கள்! ஏன், இந்தக் குழப்பநிலை!!

இதெல்லாம் கிடக்கட்டும், திருமங்கை ஆழ்வார், புத்தாலயத்தை இடித்தார் என்று கூறுகிறாயே, அது உண்மைதானா, என்று சற்றுக் கோபத்துடன் கேட்கத் தோன்றும்.

'சுமார் ஆயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவராகக் கருதப்படும் வைஷ்ணவ அடியாரான திருமங்கை மன்னர், நாகப்பட்டினத்திலிருந்த புத்தர் ஆலயங்களை இடித்து அவ்விடத்தில் கிடைத்த தங்க விக்ரஹத்தை உருக்கி அதைக்கொண்டு திருவரங்கத்து எம்பெருமானுக்குச் சேவை செய்தார் என்று வைஷ்ணவ சரித்திரங்கள் கூறுகின்றன''

இது 'பாபியேன்' சொல்வதல்ல; தினசரியின் 21—2—49ல் இதழில் உள்ள கட்டுரையில் காணப்படுவது.

இவ்விதமான பக்தி நியாயமா, தேவையா, நடைமுறைக்கு உகந்ததா என்று கேட்கிறோம். சோமநாதபுரம் கோயிலை இடித்த கஜனிமீது நாம் கோபம் கொள்கிறோம், இன்றும் சரிதத்திலே அதனைப்படிக்கும்போது பதைக்கிறோம்.

திருமங்கை, வைணவர்களுக்கு ஆழ்வார், சந்தேகம் இல்லை. ஆனால் பௌத்தர்கள், திருமங்கை ஆழ்வாரைப் பற்றி, என்ன எண்ணுவார்கள், என்று கேட்கிறோம்.

திருவரங்கம் சென்று தரிசிக்கும் போதும், பாசுரம் படிக்கும்போதும், திருமங்கை ஆழ்வாரின் பக்தியின் பெருமையை உணர்ந்து, பாராட்டுவர் வைணவர்கள்.

(அடுத்த பக்கம் பார்க்க)

சென்றவாரத் தொடர்ச்சி

# செக்கோஸ்லோவேகியா

## 4

[அண்ணாத்துரை]

தாய்மொழிக்கு ஏற்பட்ட தாழ்நிலையைப் போக்கி, மொழிப்பற்றின் மூலம் நாட்டுப் பற்று பெற்று, தாயகத்தைத் தருக்கரின் ஆதிக்கத்திலிருந்து விடுவித்து, மீண்டும் நாட்டுக்கு நல்லநிலை ஏற்படச் செய்தனர், செக்கோ நாட்டு விடுதலை வீரர்கள்.

ஒரு நாட்டு மக்களின் உள்ளத்தை உருக்குலைக்க, அவர்களின் வாழ்க்கை முறையைக் கெடுக்க, அவர்களின் மொழியைச் சிதைத்தால் போதும் என்று ஆதிக்கக்காரர்கள் எண்ணி திட்டமிட்டு வேலை செய்து வெற்றி கண்டனர். அந்தச் சூட்சமத்தை அறிந்துகொண்ட ஜான்ஹஸ் போன்றோர், தாய்மொழியை அரியாசனத்திருக்கச் செய்வதன் மூலம் தாயகத்தை விடுவிக்க முடியும் என்று திட்டமிட்டு வேலை செய்து வெற்றி பெற்றனர்.

மொழி அழிந்தது, வாழ்வும் குலைந்தது—மொழி தழைத்தது வாழ்வும் வளம் பெற்றது.

மொழி முனையிலேயே போராட்டம்! மொழி மூலமே வெற்றி தோல்வி, வாழ்வு தாழ்வு, தன்னாட்சி, வீழ்ச்சி என்று அமைந்த அற்புதமான வரலாறு, செக்கோ நாட்டுடையது. வீரங்கொண்டெழுந்து விடுதலை பெற்ற செக்மக்களின் வெற்றியின் காரணத்தை அறிந்துகொண்ட வஞ்சக வினையினர், மீண்டும் ஓர் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்தவண்ணமிருந்தனர், செக்கோ நாட்டைச் சிதைக்க. அந்தச் சந்தர்ப்பமும் கிடைத்தது.

ஜான்ஹஸ், நாட்டுக்குப் புதிய நிலையை உண்டாக்கியவர்—எல்லாத் துறைகளிலும், அவருடைய முயற்சியினால் ஓர் மறுமலர்ச்சி ஏற்பட்டது என்பதைக் குறிப்பிட்டிருந்தோம். இதிலே அவருடைய உயிருக்கு உலை வைத்தது, மார்க்கத்துறையிலே அவர் மூட்டிய புரட்சி. கத்தோலிக்க பாதிரிமார்களின் போக்கை, ஆதிக்கத்தை, அவர் கண்டித்தார். அந்த மதக் குருமார்கள், கத்தோலிக்கர்கள் மட்டுமல்ல, ஜெர்மானியருமாவர்! எனவே ஜான்ஹஸ், அவர்களை எதிர்த்தபோது, அவர் ஒரே சமயத்தில், ஒரே தாக்குதலின் மூலம், இரு எதிரிகளை, இரு கேடுகளை ஒழிக்கும் ஒப்பற்ற காரியத்தைச் சாதித்தார்.

பாருங்கள்! மதகுருமார்களே! ஜெர்மன் ஆதிக்கக்காரர்களே! அவர்களின் வாழ்வு நெறியும் வாழ்க்கையை, ஆதிக்க வெறியைக் கவனியுங்கள். அவர்கள் உங்களை ஆட்டிப் படைக்க ஏன் அனுமதிக்கிறீர்கள்! உங்கள் ஆத்மாவை அவர்களிடம் ஒப்படைக்கிறீர்களே—ஆண்டவனுக்கே சகிக்காதே இது—என்று ஜான்ஹஸ் பேசியபோது, மக்கள், மதக் குருமார்களின் மமதையையும் அதேபோது, ஜெர்மானிய ஆதிக்க வெறியையும், வெறுக்கவும், எதிர்க்கவும் முன்வந்தனர். ஜெர்மன் ஆதிக்கமும் ஒழிந்தது — மதத்தின் பெயரால் ஆதிக்கம் செலுத்திய கொடுமையும் ஒழிந்தது. அந்த நாட்களிலே, ஜான்ஹஸ் கூட்டத்தார் நடத்திய பிரசாரம் ஏறத்தாழ, இன்று சுயமரியாதைக் கட்சியினராகிய நாம் நடத்தும், பிரசாரம் போன்றதாகவே இருந்திருக்க வேண்டும்.

நாம் "ஆரிய ஆதிக்கம் ஒழிய வேண்டும்! பார்ப்பன ஆதிக்கம் ஒழிய வேண்டும்." என்று பேசும்போது, அயலாரின் ஆதிக்கத்தை ஒழிக்கும் வேலையையும் மதத்தைக் கருவியாக்கிக் கொண்டு மக்களை அடக்கும் கொடுமையையும் எதிர்க்கிறோம் என்றுதானே பொருள்.

பார்ப்பனர்கள் இன்று பிறவிக் குருமார்களாகி, புரோகித வகுப்பாராகி இருப்பதுபோலன்றி, வேறோர் வகுப்பார், இதே நிலையிலிருந்துகொண்டு, இதே காரியம் செய்து வந்தால், நாம் எதிர்க்காமல் இருந்து விடுவோமா? ஒருக்காலும் இல்லை! பார்ப்பன வகுப்பினர், புரோகித வகுப்பினராக இருந்துகொண்டு ஆதிக்கம் செலுத்துவதால், புரோகித ஆட்சிமுறை பொதுமக்களைச் சுரண்டும் முறையாகையால், அந்த முறையை ஒழிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள நாம், பார்ப்பன ஆதிக்

(11-ம் பக்கம் பார்க்க)

---

[முன்பக்கத் தொடர்ச்சி]

நாகப்பட்டினம் சென்று, தங்கள் ஆலயம் இருந்து இடிக்கப்பட்டுப் போனதை எண்ணும்போது, பௌத்தர்கள் மனநிலை எப்படி இருக்கும். திருவரங்கத்தாருக்குத் திருமங்கை செய்த திருப்பணி, புத்தர் கோயில்களை இடித்து தங்கத்தாலான புத்த விக்ரகத்தை உருக்கி எடுத்ததால்தான்—என்பதை அவர்கள் அறியும்போது, நம்மைப்பற்றி என்ன எண்ணுவர்?

இத்தனைக்கும், புத்தமார்க்கம் அன்னிய நாட்டுடையதா! அல்ல! ஆஸ்திகத்தை அழிப்பதா? அல்ல! பாரதவர்ஷத்தின் மார்க்கம்! இன்று நாம் போற்றிப் பொறித்திருக்கும் சக்கரச் சின்னத்தைக்கொண்ட அசோகனால் ஆதரிக்கப்பட்ட மார்க்கம். அரண்மனையை அந்தஸ்த்தை, அழகு மனைவியை அருமைக் குழந்தையை விட்டுப்பிரிந்து, அடவிகளில் அலைந்து, அறநெறியைக் கண்டறிந்து அவனி உய்யக் கூறிய உத்தமன் தீட்டிய திருநெறி. அத்தகைய புத்த மார்க்கத்தவரின் ஆலயம், பகை காரணமாக அல்ல படை எடுப்பினால் அல்ல, பௌத்தர்கள், வைணவத்தை அழிக்க முனைந்தனர் என்று காரணம் ஏதேனும் இருந்ததால் அல்ல, திருவரங்கத்தாருக்குத் திருப்பணி செய்ய வேண்டும் என்ற எண்ணம் திருமங்கை ஆழ்வாருக்கு இருந்ததால், இடிக்கப்பட்டது — தங்க விக்ரகம் உருக்கப்பட்டது, இத்தகைய பக்திக்கு, இங்கணில் இடமில்லை—ஏற்பார் இல்லை—இந்நிலையிலே, இவ்விதமானதும் இதைவிட மோசமானதுமான பக்தி முறைகளை வலியுறுத்தும் பழங்கதைகள், ஏன், புண்ணேடுகள் என்று கேட்கிறோம். தவறா?

# இரும்பு மனிதர் தரும் ★ கரும்புச்சாறு!

பர்மாவில உள்ள கம்யூனிஸ்டுகளுடன தொடர்பு ஏறபடுத்திக கொண்டு, இங்கு குழப்ப நிலையை உண்டாக்க, இநநாட்டுக் கம்யூனிஸ்டுகள் சதித் திட்டம் தயாரித்திருந்தனர் என்றும், இநதத் தகவலைச் சர்க்கார் கண்டறிந்து முளையிலேயே கிள்ளிவிட்டதாகவும், புது டில்லியிலிருந்து அறிவிக்கப்படுகிறது.

பர்மாவிலுள்ள கம்யூனிஸ்டுகளுக்கு சீனாவிலுள்ள கம்யூனிஸ்டுகளின தொடர்பும் உதவியும் இருப்பதாகக் கூறப்படுகிறது.

மலேயாவிலே, பல பகுதிகளிலே கம்யூனிஸ்டு முகாம்கள் அமைககப் படடிருபபதாகவும், பலாத்காரம் தலைவிரித்தாடுவதாகவும் கூறபபடுகிறது.

சயாமில், கம்யூனிஸ்டுகளின் ஆதிக்கம் புகுததபபடுவதற்கான ஏறபாடுகள் நடைபெற்றன என்றும், கருவிலேயே இநத முயறசி அழிக்கபபட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

இந்தோனேஷியாவிலே, விடுதலைப் போர்ப் படையிலேயே பிளவு ஏற்பட்டுவிட வேண்டிய முறையிலே, கம்யூனிஸ்டுகளின செல்வாககு ஓங்கிவிட்டதாகக் கூறபபடுகிறது.

திபெத்—நேபாளம்— ஆப்கனிஸ்தான்—போனற எல்லை நாடுகளிலே, கம்யூனிஸ்டுகள், முகாம்கள் அமைத்துக்கொள்ள முயற்சிகள் நடைபெறுவதாக, விஷய மோப்பம் பிடிப்பவாகள், திடுககிடும் தகவல்களை வெளியிடுகிறாகள்.

ஹைதராபாத் சமஸ்தானத்திலே சில பகுதிகளிலே, கம்யூனிஸ்டுகளின் ஆதிக்கம், காங்கிரஸ்காரரின் உயிருக்கே ஆபத்து விளைவிக்கக்கூடிய விதமாக வளர்ந்துவிட்டதாகக் கூறபபட்டு, கம்யூனிஸ்டுகளை 'வேட்டை'யாடிப் பிடிகக, போலீஸ், ராணுவ, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஹைதராபாத்தில் தங்கள் ஆதிக்கத்தில சிக்கியுள்ள இடத்திலே, கம்யூனிஸ்டுகள் இதுவரை 250 காங்கிரஸ்காரர்களைக் கொலைசெய்ததாக சர்தார்படேல் கூறுகிறார்.

சயாமில் கம்யூனிஸடு! பர்மாவில் கம்யூனிஸ்டு! ஹைதராபாத்தில் கம்யூனிஸடு!—இங்கு, அங்கு, எங்கு பார்பபினும கம்யூனிஸ்டுகளின கரம வலுதது வருவதாகக் கூறபபடுகிறது—அந்தக் கரம், இரததக் கறை படிந்திருக்கிறது எனறு அறிவிக்கப் படுகிறது—இந்த ஆபத்தை அறிந்து ஆவன செய்க, எனறு ஆட்சியாளர்கள் கூறியபடி உளளனா—எச்சரிதத வண்ணம் உள்ளனர்.

ஹைதராபாத்திலே, விமான மூலம், துண்டுப பிரசுரங்கள் வீசப் படுகின்றன பொதுமககளுக்கு, கம்யூனிஸ்டுகளால் ஏறபடக்கூடிய பேராபததை விளக்கி. உயிர் போகும்! உடைமை போகும்! உரிமைபோகும்! குடும்பம நாசமாகும்! சட்டம்சரியும்! சாநதி குலையும்! இரத்தம ஓடும்!—என்று மக்களுக்குக் கூறப்படுகிறது. தலைவாகளின பேச்செலலாம், கம்யூனிஸ்டு அபாயத்தைத் தடுககவேண்டியதன் அவசியத்தைபபற்றியதாகவே இருந்திடக் காண்கிறோம். பலாத்காரம், குழப்பம், உள்நாட்டுப்போர், போட்டி சாக்கார், ஆகிய முறைகள் நிச்சயமாக, ஒரு நாட்டை, அதிலும் விடுதலையைப் பெற்று அதிக காலமாகாத இந்தியா போன்றதோர் பெரிய தேசத்தை, நாசமாக்கிவிடும், எனபதை எநத நலலறிவாளரும் மறுககமுடியாது. சீனாவின் சீரழிவும், பாமாவின் குழப்பநிலையும், ஒரு நாட்டுக்கு வேதனையையும் வீழ்ச்சியையும் தரககூடிய ஆபத்துகள் என்பதில் ஐயமில்லை. எனவே, பலாத்காரமும், உள்நாட்டுக் குழப்பமும், இங்கு தலைகாட்ட முடியாத வண்ணம், தக்க நடவடிக்கைகள் எடுததுக் கொள்வது, எந்த பொறுப்புள்ள சர்க்காருக்கும் இன்றியமையாத கடமைதான். எனவே, பலாத்காரத்தினால ஏற்படக்கூடிய கொடுமைகளையும, நாட்டிலேகுழப்பநிலை மூண்டுவிட்டால், மக்களுக்கு உண்டாகக்கூடிய வேதனைகளையும், எடுததுக்காட்ட வேண்டியதும், மக்கள் விவரமறியாமல், அவ்விதமான அழிவுப் பாதையில் சென்றுவிடாதபடி பார்ததுக் கொள்வதும் ஆட்சியாளர்களின பொறுப்புதான —ஆனால், கம்யூனிஸ்டுகள் குழப்பநிலை உணடாக்கினால் ஏற்படக் கூடிய 'பயங்கரஙகளை'க் கூறுவதேபோதும், கமயூனிஸ்டு செல்வாக்கைக் கருவறுக்க என்று கருதினால், சர்க்காரின் போக்கு, பைத்யககாரத்தனமாகததான இருக்கும்.

கம்யூனிஸ்டுகளால் விளையக் கூடிய ஆபத்துககளைப் பன்னிப் பன்னிப் பேசுவதிலே, உலகிலே முதற் பரிசு, சர்ச்சிலுக்கு! இரண்டாவது இடம் அமெரிக்கத் தலைவர்களுக்குக் கிடைத்து வருகிறது. அவர்களபேசுகிற முறையிலேயே, இங்கும், 'பயங்கர விளைவுகள் ஏற்படும—நாசம் நர்த்தனமாடும—இரத்தம் ஆறாக ஓடும்' என்று பேசுவது, ஏகாதிபத்யப் பல்லவியைக் குருவிடம் கற்றுப் பாடும் சீடரின் கீதம் போல ஆகிவிடக் கூடாது என்று ஆட்சியாளர்களுககு அறிவுறுத்த விரும்புகிறோம்.

## கரேன்ஸ்தான்.

—:0:—

பர்மாவில், சர்க்கார் படைகளைத் தோற்கடித்துவரும் நிலையில், கரேன் வகுப்பாரின் கோரிக்கையான, கரேன்ஸ்தான் எனும் தனிநாட்டை அவர்கள் அமைதது கொள்வதை ஏற்றுக்கொள்வதாக, சர்ககார் கமிஷன் கூறியிருக்கிறது.

கம்யூனிஸ்டுகளால் நாசம் விளையும் என்பதையே பிரமாதப்படுத்திப் பேசினால், பயனில்லை—அவர்களை வேட்டையாடிக் கூண்டிலே தள்ளிவிடுவதால் மட்டும் பயன் கிடைக்காது—பொதுவுடமை ஆட்சியைவிட இராமராஜ்யம் சிலாக்கியமானது என்று தத்துவ விளக்கம் கூறினால் மட்டும் பயன் ஏற்பட்டுவிடாது—கம்யூனிஸ்டுகள் எந்தக் காரணங்களால் செல்வாக்குப் பெறுகிறார்கள், அவர்களின் செல்வாக்கு வளருவதற்கு என்ன காரணம், என்பதைக் கண்டறிந்து ஆவன செய்வதே, அறிவும் திறனும் கலந்த செயலாகும்.

தீப்பிடித்தெரியும் நகரம், திக்கு பலவற்றுக்கும் திகைத்து ஓடும் மக்கள், காய்ந்துபோன வயல்கள், அக்கு பிணங்கள், அவைகளைக் கொத்தித் தின்னும் வல்லூறுகள், எனும் இத்தகைய பயங்கரக்காட்சிகள் ஏற்பட்டுவிடும் கம்யூனிஸ்டுகளின் திட்டமான குழப்பம நேரிட்டால், என்று கூறுவதுதான், பலன் தரக்கூடிய பிரசாரம் என்று ஆட்சியாளர்கள் கருதுகிறார்கள். மிக மிகத் தவறான போக்கு இது.

எப்போதோ எவராலோ நேரிடக்கூடிய ஆபத்துக்களைப் பற்றிப் பிரமாதப்படுத்துகிறீர்கள், பிரமுகர்களே! வருங்கால விபத்துகள் கிடக்கட்டும், இப்போது என்ன வாழுகிறது இங்கே! உணவு இல்லை—உடை இல்லை—வீடு இல்லை, வாசல் இல்லை—வேலையில்லை வாழ்க்கையில் துளியும் வளமில்லை—வதைகிறோம்—இது கண்முன் இருந்து கலக்கும் காட்சியாக இருக்கிறது — நாங்கள் இந்தப் பாடுபடும்போது, நிஜாமும் அவருடைய நவரத்னங்களும், மகாராஜாக்களும் அவர்களின தர்பார் மந்தகாசங்களும், முதலாளிகளும் அவர்களின் பணமூட்டைகளும், இருக்கவும் தான் காண்கிறோம்—எங்கள் மனம் குளிரும் என்று எண்ணுகிறீர்கள் இந்த நிலை கண்டு! வீணாக எம்மை மிரட்டாதீர், எப்போதோ ஏதேதோ ஆபத்து வரும் என்று கூறி, இப்போதுள்ள நிலைமை நாங்கள் இனியும் சகித்துக் கொள்ளத்தான் வேண்டும் என்று வாதாடுவது முறையல்ல—புலி உறுமும் சத்தம் கேட்கிறதா—அதைக் கவனி—அதன் கோரப்பற்களை எண்ணிப்பார்—என்று கூறி புலியிடமிருந்து தப்பவேண்டுமானால், என்னை விரட்டும் வேலையைச்செய்து கொண்டிராதே என்று ஓயாது உபதேசம் செய்வது முறையாகுமா! ஆட்சியாளர்களே! எமது கண்முன் தெரியும், வாழ்வை வதைக்கும் கொடுமைகளைக் கவனியுங்கள்—வறுமை எனும் ஓநாயை ஓட்டுங்கள், அதனை உலவவிடும் சுரண்டல் காட்டை அழியுங்கள்!—என்று ஏழைகள் பேசமுடியாது — ஆனால் எண்ணுகிறார்கள்.

அந்த எண்ணம் தான் கம்யூனிஸ்டுகளின் சக்தி வளரும் காரணம். அந்தக் காரணம், பொதுஜன பாதுகாப்புச் சட்டம், புலன் விசாரிக்கும் போலீஸ், குறி தவறாது சுடும் இராணுவம், இவைகளுக்கு மேலான வேகமும் திறனும் கொண்டது.

எனவே ஆட்சியாளர்கள், வருங்கால விபத்துகளை, மதவாதிகள், நரகலோக வர்ணனையைக் கூறுவது போலக் கூறிக்கொண்டே இருந்துவிட்டால் போதும் என்று இருந்துவிடாமல். கண்முன் தெரிவதும், கம்யூனிஸ்டுகள் எடுத்துக் காட்டுவதும், மக்களின் மனதிலே உறங்கிக் கொண்டிருக்கும் மிருகத்தைக் கிளப்பிவிடக் கூடியதுமான, கொடுமையும் மடமையும் நிரம்பிய நிலைகளை மாற்றத் துணிவுடன் முயற்சிக்கவேண்டும்.

ஸ்தாபனபலம், பிரசாரபலம், ஆட்சிபலம், இவைகளே போதும், கம்யூனிஸ்டுகளை ஒழித்துக்கட்ட என்று எண்ணுவது, ஏகாதிபத்ய முறை. நமது நாட்டுத் தலைவர்கள் அம்முறையைக் கையாளாமல், உடனடியாகத் திட்டமிட்டு, பணிபுரியக் கிளம்பவேண்டும், பெரும்பான்மையினரின் வாழ்க்கையிலே உள்ள வேதனைகளைப் போக்க. கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கு வளர்ந்தால், பலாத்காரம் தலைவிரித்தாடும், இரத்தம் ஓடும், ஆகவே பொதுமக்களே! கம்யூனிஸ்டுகளை வேட்டையாடுங்கள்!—என்று பிரசாரம் செய்வதைவிட, இந்திய துணைக்கண்டத்திலே உள்ள ராஜாக்கள், ஜெமீன்தாரர்கள், முதலாளிகள், சுரண்டல் யந்திரக் காவலர்கள் ஆகியோருக்குக் கூறவேண்டும், கம்யூனிஸ்டுகளின் கரம் வலுத்தால், உன் மகுடமும் இராது, ஆலை அரசும் இராது, மிட்டா மிராசு இராது, பெட்டி பேழையில் தூங்கும் தங்கப் பாளங்கள் இராது, ஆகவே திருந்து! முறையை மாற்று! சுரண்டலை நிறுத்து! — என்று இடித்துரைக்க வேண்டும் — வருங்கால ஆபத்தை எடுத்துக்காட்டி, இன்று ஆட்சியாளர்களைத் திகைக்கச் செய்யும் 'சுகவாசிகளை' வழிக்குக் கொண்டுவர வேண்டும்! பயங்கர நிலைமையினால் புரட்சியினால், ரஷியச் சீமான்கள் உயிர் தப்பினால்போதும் என்று ஐரோப்பாவில் பல பாகங்களுக்கும் ஓடிய 'சேதி'யைக் கூறி—வேண்டாமா, நேருவையும்படேலையும், நீ! நமது கேள்விக்குப் பதில் சொல் என்று கேட்கும் அளவுக்குத் துணிவு கொண்டுவிட்ட, சுரண்டல் போக்கினருக்கு!

இந்த முறையைக் கையாளாமல் ஆடிக்கறக்கவேண்டிய மாட்டை அடித்தும், அடித்துக் கறக்கவேண்டிய மாட்டின் முன் ஆடியும் வருகின்றனர் தலைவர்கள்.

அவர்களின் இடிமுழக்கம்—தீப்பொறிப்பேச்சு — கண்டனம் — தாக்குதல்—யாவும் பாட்டாளியின் கூட்டத்திலே—பொதுமக்களிடம்!

இன்சொல் — விளக்கவுரை — கோரிக்கை — வினயம் — வேண்டுகோள்—யாவும், மேட்டுக்குடியினர், காட்டுராஜாக்கள் முன்னிலையில்!

இதுவா, கம்யூனிசத்தைத் தடுக்கும் முறை!!

எவ்வளவு துணிவும் புது நம்பிக்கையும் இருந்தால், தொழிலரசர்கள், வெளிப்படையாகக் கூறுவர், இலாபமே எமது நோக்கம்—இதனைக் குறைக்கும் முறையைச் சர்க்கார் கொண்டால், நாங்கள் பணம் போட்டுத் தொழில் நடத்தமாட்டோம்—என்று!

உபசாரத்துக்குக்கூட அவர்கள், கூற மறுக்கிறார்களே இப்போது, நாங்கள் நாட்டு மக்களுக்காக உழைக்கிறோம் என்று.

சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம்—நேற்று சர்தார் முன்னிலையில் பேசியது போலவே—தொழிலரசர்கள், துணிவுடன் பேசுகிறார்கள்.

1. சர்க்காரே, தொழில்களை எடுத்து நடத்தப் போவதாகப் பேசக்கூடாது.
2. வரி, குறைக்கவேண்டும்.
3. தொழிலாளரை அடக்க வேண்டும்.

(10-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

ஞாயிறு] 27—2—49 [காஞ்சி

# மூகாம் அமைக்கிறார்கள்!

✽

"இம் மாகாணத்தில் பிராமணர்கள் மீது பிறவகுப்பாருக்குக் கெட்ட எண்ணம் ஏற்படும்படிச் செய்யப்பட்டு வருகிறது. இதை அலட்சியமாக விட்டு விடக்கூடாது. முளையிலேயே கிள்ளி விட வேண்டும்"

*சேலம் 'பிராமண' மாநாட்டினர் இவ்விதம் பேசியும் தீர்மானித்தும் இருக்கிறார்கள்.*

ஏகாதிபத்ய தாசராக இருந்து, பதவிகளில் புரண்டு பழுத்த கிழவராக இருக்கும் விஜயராகவாச்சாரியார் தலைமைதாங்கினார், இந்தத் தர்ப்பாசூரர் மாநாட்டுக்கு! தென்னாட்டிலே பெரிய முதலாளியாகி உள்ள மோட்டார் சுந்தரம் ஐயங்கார், திறந்துவைத்தார் இந்தத் திருப்பிரம்மங்களின் மாநாட்டை.

'பிராமண மாநாடு', பிரம்மணீயத்தை எப்படி வளர்ப்பது, என்பதற்காக என்றால், பதவி காரணமாகவும், பணம் தேடுவது காரணமாகவும், படிப்படியாகப் 'பிராமண தர்மத்தை' இழந்துபோக வேண்டிய நிலைபெற்று விட்டவர்கள், கூடிக் கலந்து பேசிப் பயன் என்ன?

'பிராமணன்' என்னவிதமாக இருக்கவேண்டும் — அவனுடைய வாழ்க்கைமுறை எப்படி இருக்க வேண்டும், என்று அவர்கள் போற்றிப் புகழ்ந்துவரும் ஏடுகளிலே குறிப்பிட்டுள்ள இலட்சணங்களை இழந்தவர்களும், அந்த இலட்சணங்களின்படி இந்நாட்களில் வாழமுடியாது என்பதை அறிந்துகொண்டவர்களும், மாநாடு கூடி, "பிராமணியத்தை"ப் பாதுகாக்க முற்படுவது, மொட்டைத் தாதர்கள் கூடிக்கொண்டு, கூந்தலின் நேர்த்தியைப் பற்றிப் பேசி வழிவகுப்பது போன்றதுதான்!

பிராமண தர்மத்தின்படி நடந்துகொள்ளாமல், ஆசசாரத்தை அறியாமல், வாழ்ந்துவரும், தமது இனத்தவரை, அவர்களிலே ஆச்சார அனுஷ்டானம் அறிந்தவர்கள், அவைகளிலே அக்கரை கொண்டவர்கள், மீண்டும் அந்த ஆச்சாரம் துலங்கவேண்டும் என்பதிலே ஆவலுள்ளவர்கள், யாரார் எவ்வெவ் வகையில், என்ன காரணங்களால், பிராமணனுக்குரிய தர்மத்தினின்றும் வழுவிவிட்டிருக்கிறார்கள் என்பது பற்றி விசாரணை நடத்தி, திருத்தம் கூறியோ, தண்டித்தோ அவர்களை, 'பிராமண தர்ம மார்க்கத்துக்குத் திருப்பி அழைத்துச் செல்லும் திருப்பணியிலே ஈடுபட்டால், நமக்கு ஆட்சேபணை இல்லை — வேடிக்கையாக இருக்கும் 'பிராமண தர்மத்தை' இழந்த பிராமணர்களின் பட்டியலை நாம் கூட, மாநாட்டினரின் உபயோகத்துக்காகத், தரமுடியும்—அவர்கள் திடுக்கிடும் வகையான தகவல்களை, ஆதாரங்களைக் காட்டமுடியும். மாநாடு பிறகு நடைபெறுமா என்பதே சந்தேகம் ஆகிவிடும், ஏனெனில், 'பிராமண தர்மம்' என்று அவர்களின் ஏடுகளிலே குறிப்பிட்டுள்ள முறையிலே வாழ்ந்துவரும் 'பிராமணர்' நூற்றில் ஒருவர்கூடக் கிடையாது.

நமது பெண்கள் பரதநாட்டியம் ஆடுவது கூடாது—என்று துக்கத்துடன் பேசவேண்டிய நிலைக்கு வந்துவிட்ட இந்நாளிலா, 'பிராமண தர்மம்' பாதுகாக்கப்பட முடியும்!

உண்மையான 'பிராமண தர்மம்' எப்படிப்பட்டது என்பதைப் பற்றி விவாதிக்காமலே, வாதத்துக்காக ஒப்புக்கொண்டு, நிச்சயமாகவே, 'பிராமண தர்மத்தை'க் காப்பாற்றும் நோக்கம் கொண்டிருந்தால், இப்போது கூட்டியது போன்ற மாநாடுதானா, அதற்கான வழி? மாநாட்டை முன்னின்று நடத்துபவர்கள் தானா, அந்தத் 'தர்மத்தை'க் காப்பாற்றக் கூடியவர்கள், என்று கேட்கிறோம். எப்படிப்பட்ட பழைமை மனப்போக்கினரும், இன்று அறிவர், பிராமணர்கள் பிராமணருக்கு உரிய தர்மத்தின்படி நடக்கவில்லை—நடந்துகொள்ள முடிவதில்லை, என்பதை.

சற்றுத் தெளிவுள்ளவர்கள் அந்த நாட்களிலே, 'பிராமணனுக்கு'க் குறித்துள்ள தர்மம் மட்டுமல்ல, எந்தக் குலத்துக்காகக் குறிப்பிடப்பட்டுள்ள தர்மமும், இக்காலத்திலே நடைமுறைக்கு, ஏற்றதல்ல என்பதை அறிவர்.

தெளிவு இன்னும் சற்று அதிகமாகப் பெற்றவர்கள், குலதர்மத்தை அனுசரிக்க முடியாது என்பதை மட்டுமல்ல, 'குலதர்மம்' வகுக்கப்பட்ட காலம், சமுதாயத்தின் குழந்தைப்பருவ ஏற்பாடு—சமுதாயம் இன்று அடைந்துள்ள வளர்ச்சியிலே; அந்தத் தர்மங்கள் வெறும் கேலிக் கூத்துத்தான் என்பதை அறிவர்.

மேலும் கொஞ்சம் பகுத்தறிவு பெற்றவர்கள், இந்தக் குலதர்மம்—ஜாதி ஆச்சாரம்—எனும் ஏற்பாடுகளே, சூதானவை, சுரண்டல் முறை, ஒரு குலத்தின் உயர்வுக்காக வகுக்கப்பட்ட சூழ்ச்சித் திட்டம் என்பதை அறிவர்.

சற்று மான உணர்ச்சி உள்ளவர்கள், இந்த முறையை முறியடிப்பதை, வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொள்வர்.

நிலைமை இப்படியிருக்க, பிராமணர்கள் மாநாடு கூட்டுகிறார்கள், பதவியில் புரண்ட ஒரு கிழவரையும் பணப்பெட்டிகளின் மீது படுத்துறங்கும் மற்றோர் பிரமுகரையும் அழைத்து வைத்துக்கொண்டு. 'பிராமண மாநாடு' நடத்துகிறார்கள் என்றால், உண்மையில், பிராமண தர்மத்தைக் காப்பாற்றவோ, ஆச்சாரத்தை நிலைநாட்டவோ, அல்ல! ஆனால் ஏன், கூடினார்கள்? அவர்களுக்கு, உண்மையாகவே, பழைய கால பிராமணராக, கோலத்தில் கோட்பாட்டில், வாழ்க்கையில், இருக்கும் நோக்கமா, என்றால், நிச்சயமாக நோக்கம் அது அல்ல— அவர்களின் நோக்கம், ஆச்சாரத்தைப் பற்றியதல்ல, ஆதிக்கத்தைப் பற்றியது!

சமுதாயம் மாறிவிட்டது — மக்களின் மனப்போக்கு மாறிக்கொண்டே இருக்கிறது — இவர்களும் கூடத்தான்! — இந்த மாறுதலின் காரணமாக, முன்பு இந்த ஜாதியாரால், எளிதிலே பெறமுடிந்த ஆதிக்கம் இன்று பெறமுடியவில்லை— அதனால்தான், மாநாடு கூட்டுகிறார்கள்— மடிசஞ்சியின் மகத்துவத்தை மாநிலத்துக்கு அறிவிக்க அல்ல— மயிலை திருவல்லிக்கேணிக்கே அறிவிக்க முடியாது—ஆதிக்கம் அழிந்துபடுவதைத் தடுக்கும் முயற்சிக்காக மாநாடு கூட்டுகிறார்கள்.

'சேலம் பிராமண மாநாடு' ஆதிக்கம் செலுத்திவந்த ஒரு கூட்டம், நாட்டிலே ஏற்பட்டுவரும் புதிய போக்கின் காரணமாகத் தமது ஆதிக்கம் குறைவது கண்டு, கூடி அழுவதற்கு, ஆத்திரத்தைக் கொட்டிக்கொள்வதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டதே யொழிய, உண்மையிலேயே, 'பிராமண தர்மம்' என்று ஏடுகளிலே குறிப்பிடப்பட்டுள்ள முறை பாழாகிறதே என்பதனால், மனம் பதறி கூட்டப்பட்ட மாநாடு அல்ல!

'பிராமண மாநாட்டுக்கு' 'பிராமண தர்மம்' தெரிந்த நிபுணர்களல்ல, முன்னணி நிறுத்தப்பட்டவர்கள்—சர்க்காரிலே செல்வாக்கு உள்ள ஒரு, சர்—ஆதிக்கத்தை நிலை நிறுத்தும திட்டம் தயாரிக்கப்பட்டால், அதற்கான செலவுக்குப் பணம் தரக்கூடிய ஒரு முதலாளி — வேதம் ஓதித் தேர்ச்சி பெற்றவரோ, உபநிஷத்தின் உட்பொருளை அறிந்தவரோ, அல்ல, மாநாட்டுக்கு முன்னணி நின்றவர்கள்.

ஒரு சமயம், தங்கள் அச்சத்தைப் போக்கிக்கொள்ள, ஆறுதல் பெற, அந்தச் 'சர்'ஸரையும் ஒரு சீமானையும் கொண்டுவந்து நிறுத்தி அழுதார்த்தனரோ என்னமோ, நாமறியோம்.

ஒருசமயம் அச்சமூட்டுகிறார்களோ, எமது ஆதிக்கத்தைத் தீண்டிட முயற்சிக்கும் போர்வழிகளே! ஜாக்ரதை! இதோ பாருங்கள், எம்மிடம் உள்ள குலமணிகளை, சர். விஜயராகவாச்சாரியார் — சீமான் சுந்தரம் ஐயங்கார்! — இவர்களைக் கொண்டு, உங்களை என்னென்ன பாடுபடுத்துகிறோம் பாரீர், என்று மிரட்டுகிறார்கள் போலும்.

காலம் உணராதவர்களாக இருப்பின் அவர்கள் அவ்விதம் எண்ணிக் கொள்ளவும்கூடும். ஆனால் இது சர்கள், சீமான்கள், ஆகியோரின் சீற்றத்தைக்கண்டு சேர்திருத்தவாதி பயப்படும் காலமல்ல.

ஒருவகையிலே, பார்க்கும்போது "பிராமணர்கள்" தங்கள் ஆதிக்கத்தைப் புதுப்பித்துக்கொள்ள, ஒரு தனிமுயற்சி எடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதே, நமக்குக்கிடைத்து வரும் வெற்றியின் அறிகுறி என்று கூறுவோம்.

பிரம்மகுலோத்தமன சம்கம்—சுதர் சமாஜம்—மகாஜனசங்கம்— தேசியக் காங்கிரஸ்—என்ற பல்வேறு பேர்வைகளும் பயனற்றுப்போய், பச்சையாகவே, 'பிராமண மாநாடு' நடத்த வேண்டிய நிலைக்கு, வந்திருப்பதே, நமது வெற்றிகளில் ஒன்று என்றே நாம் கருதுகிறோம்.

அதிலும் தங்கள் ஆதிக்கத்தைப் புதுப்பிக்க, இவர்கள் என்ன செய்கிறார்கள் 'யாகம் செய்து பூதத்தைக் கிளப்பி ஏவும் காரியமா? சாபம் கொடுத்து, சர்[illegible]சத்தை ஏவும் காரியமா? அலல! அல்ல! அந்தக் காலம் மலையேறிவிட்டது! சர்களையும் சீமான்களையும் ஏவிப் பார்க்கிறார்கள்! —அதுவும் சர்களுக்கும்சீமான்களுக்கும் அஞ்சக்கூடிய காலம் கருகிவிட்ட பிறகு! 'மகாமேதாவிகள்' என்று கூறுவார் இந்த 'பிராமணர்களை'! தமது —மிக மிகத்தவறு — குதிரை பறிபோனபிறகு கொட்டிலைப் பூட்டும் மந்தபுத்தியினைவிட, மட்டரகமான மனப்போக்கு ஏற்பட்டுவிட்டது— வீழ்ச்சியின் அறிகுறி.

என்ன செய்துவிடுவார் சர்.விஜயராகவா! சர்க்காரிடம் தமக்குள்ள செல்வாக்கின் காரணமாக, வகுப்புவாரி நீதியை ரத்துசெய்யச் சொல்வார். இவ்வளவுதானே செய்வார்? இதுவும் முடிகிறதா — காங்கிரஸ் திராவிடர்கள் சும்மா இருந்துவிடுவார்களா என்பது வேறு பிரச்னை—முடிகிறது, என்றே வைத்துக்கொண்டாலும், அதனைவிடவு என்ன ஆகும்? தீர்மானம் நிறைவேறினார்களே மாநாட்டில் பிராமண ஜாதியார்மீது மற்ற வகுப்பாருக்கு விரோத உணர்ச்சி ஊட்டப்படுகிறது என்று, அந்தவிரோத உணர்ச்சியை ஊட்டிக் கொண்டிருக்க வேண்டியதில்லை ஐயா! தானாகத்தழைக்கு! தடுக்க முடியாத அளவு தழைக்கு!!

இப்போதாவது, வகுப்புவாரியாக உத்தியோகம் தரும் முறையும் கல்வி வசதி ஏற்படுத்தித்தரும் முறையும் இருப்பதால், மற்றவகுப்பார்களிலேயும், கல்வி பெறவும், உத்தியோகம் பெறவும் குறிப்பிடத்தக்க அளவுக்கு முடிகிறகாரணத்தால், எங்கு பார்த்தாலும் 'பிராமண ஆதிக்கம்' என்ற பேச்சுக்கு இருந்துவந்த பயங்கரச் சக்தி ஓரளவுக்குக் குறைந்திருக்கிறது. எல்லாவகுப்பாரிலும்தானே, படிக்கிறார்கள், என்று பேசமுடிகிறது—சாந்தி உண்டாக்கக் கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. சாஸ்திரியார் சக்கரச் சீமானையும் அழைத்துக்கொண்டு, வகுப்புவாரிப்பிரதிநிதித்வ முறையை ரத்து செய்துவிட்டார். பிறகு, [illegible] முடியாத 'ஜவாலை' [illegible] போகுது! இந்தக் [illegible] தேடித்தேடி அழைக்கிறார்கள்—[illegible] ளமாகச் செய்யட்டும். நாம் [illegible] போவதில்லை!

சேலம் மாநாட்டின் மூலம் அவர்கள் எதாவது வெற்றி பெறுவது என்று ஆசைப்படுவதானால், நாம் முதலில் குறிப்பிட்டபடி, பழைய முறையை, [illegible] பாற்ற காரியத்திலே வெற்றிபெற முடியாது — உத்யோகத்தைப் பறித்துக்கொண்டு, அதன் மூலம் தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்திக்கொள்வதற்காக, கம்யூனல் ஜி.ஓ. வை ரத்துசெய்ய வைப்பது, என்ற வெற்றியைப் பெறலாம். நேருசர்க்காரின் துணைகொண்டு இந்த வெற்றியைப் பெறமுடியும் என்று அவர்கள் நம்புகிறார்கள், அந்த 'வெற்றி' யே, தங்களுக்கு வீழ்ச்சியைத் தரப்போகிறது என்பதை, பாபம், உணரவில்லை எதையோ, முன்னமேயே [illegible] விட வேண்டும்' என்று [illegible] அதற்காக, அவர்கள் [illegible] நினைக்கும் காரியம், [illegible] தெல்லாமோ அவர்களை எதிர்க்கும் சக்தியைக் [illegible] வைத்தான் உண்டாக்கப் போகிறது. வேணுமானால் செய்தே பார்த்துவிடட்டும்.

உண்மையாகவே, நாம் இம்முறை அவர்களின் மாநாடு, உருவாகும் காரியமாற்றும் என்று நம்பினோம் நம்பும் விதமாக, சேலம் பிராமண சேவாசங்கச் செயலாளர் நடந்துகொண்டார்.

இந்தப் பேதவுணர்ச்சியும், எதிர்ப்பு பேச்சும், இனியும் இருக்கத்தான் வேண்டுமா, எதேனும் ஓர் சமரசத்துக்கு வரலாகாதா, நீக்கப்படவே முடியாத சிக்கலா இன்னல், என்று நாம், உண்மையாகவே, நினைக்கும் ஓர் சூழ்நிலை உண்டாகியது, ஒரு சிறு சம்பவத்தின் காரணமாக.

ஒரு கிழமைக்கு முன்பாக, நமது நண்பர் பெரியசாமி மாமியாருக்கு, சேலம் பிராமண சேவாசங்கத் தலைவர், பாலசுப்பிரமணிய ஐயர் என்பவர் ஓர் [illegible] இருந்தார். [illegible]

நம் நாட்டிலே பேசப்பட்டு வரும் பார்ப்பன எதிர்ப்புணர்ச்சியைப் பற்றிய [illegible]

விருந்துடன், பெரியாரின் பெருந் தொண்டினைப் பாராட்டி, அவருடைய சீரிருந்த நோக்கத்தைப் புகழ்ந்து, அவருடைய தலைமையின் கீழிருந்து பணிபுரியும் வாய்ப்புக் கிடைக்குமானால் அதனைப் பெரியதோர் பாக்கியமாகக் கருதுவதாகக் குறிப்பிட்டு விட்டு, பிராமண சேவா சங்கச் செயலாளர், சமரசமாகப் போவதற்கு வழி காணவும், சிக்கல்கள் இருப்பின் தீர்த்துக்கொள்ள முயற்சிப்பதற்கும், பெரியாருடன் நேரில் கலந்து பேச விரும்புவதாகக் குறிப்பிட்டிருந்தார்.

இந்தச் சிறு சம்பவம், நமக்கு ஓர் நம்பிக்கையை ஊட்டிற்று.

குடந்தையில் நடைபெற்ற கூட்டத்திலே, பெரியார் அவர்களும் இக்கடிதத்தைக் குறிப்பிட்டு, சமரசமாகப் போவதிலே தமக்கு எப்போதும் ஆட்சேபனை இருந்ததில்லை என்று பேசினார்.

இப்படிக் கடிதம் எழுதியவர், மாநாடு கூட்டி, அதிலே மீண்டும், கனல் கக்குவதன் காரணம், என்ன? மாநாடுதான் கூட்டினாரே, அதிலே, தமது 'கடிதத்தை' பற்றிப் பேசி, பெரியாரைச் சந்தித்துப் பேச, ஒரு தீர்மானம் நிறைவேற்றி, ஒரு சிறு கமிட்டி அமைத்திருந்தால், எவ்வளவு நல்லறிவு படைத்த காரியமாக இருந்திருக்கும்.

இதைச் செய்ய மறந்தார், சர்வையும் சீமானையும் காட்டி, சல்லடம் கட்டிப்பார்க்கிறார்.

சேலம் பிராமண மாநாடு, அந்த வகுப்பாருக்கு, இன்னமும், ஆதிக்க நோக்கம் இருப்பதை எடுத்துக் காட்டுவதற்குத்தான பயன்பட்டதே ஒழிய, பிறவகுப்பாருக்கு உள்ள கெட்ட எண்ணத்தைப் போக்கப் பயன்படவில்லை—பயன்படாது! முகாம் அமைக்கிறார்கள் முப்புரியினர்—என்றுதான் மக்களை எண்ணச் செய்யும், அவர்களின் மாநாடு.

●

## இரும்பு மனிதர்

7-ம் பக்கத் தொடர்ச்சி

துணிவாகக் கூறுகிறார்கள்! இவைகளைச் செய்யாவிட்டால், 'வேலை நிறுத்தம் செய்வோம்' என்று மிரட்டுகிறார்கள். பணம் போடமாட்டார்களாம் தொழிலில்! தொழில்களிலே அக்கறை ஏற்படாதாம்! லாபம் இருக்காதாம்! பண்டங்கள் உற்பத்தியாகாதாம்! பட்டவர்த்தனமாகப் பேசுகிறார்கள்! படேல், அவர்களிடம் என்ன பேசி இருக்கவேண்டும்?— என்ன பேசினார், சென்னையில்?

சர்க்கார், தொழில்களைத்தானே எடுத்து நடத்ாது — பயப்படாதீர்கள்—என்னை நம்புங்கள்—என்று கூறினார். கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கைக் கருவறுக்க இந்தப் பேச்சும் போக்கும் உதவுமா? தனிப்பரவதா? பிரசாரப் பீரங்கிக்கு மற்றோர் குண்டு கிடைத்தது என்று தானே மகிழ்வர், கம்யூனிஸ்டுகள்!

தொழில்களை நீங்களே நடத்துங்கள்—சர்க்கார் உங்கள் ராஜ்யத்திலே நுழையாது — இப்படியா, உறுதிமொழி தருவது, உலக அறிவாளிகளாலே கண்டிக்கப்படும், சுரண்டல் முறையினருக்கு!

உறுதிமொழி அளித்ததோடு இல்லை—காரணமும் காட்டிப்பேசி இருக்கிறார் சர்தார்.

அகழி உடைந்து விட்டது—கோட்டை கலகலத்து விடுகிறது—படையிலே கலகம்—பட்டத்து இளவரசனுக்குப் படுகாயம் — ஆகவே, படையெடுத்து விடாதே, எமது ராஜ்யத்தின் மீது, என்று ஓலைவிடும் அரசர் உண்டோ?

சர்தார் கூறுகிறார், தொழிலரசர்கள் கூட்டத்தில், "சர்க்கார், தொழில்களை எல்லாம் சர்க்கார் உடைமைகளாக்கிவிடும் என்று பயப்பட வேண்டாம். சர்க்காரால முடியாது. அதற்கான திறமையும் ஆள் வசதியும் சர்க்காரிடம் கிடையாது. நிர்வாகம் நடத்தவோ, போதுமான திறமைசாலிகள், அனுபவசாலிகள் இல்லை—இந்நிலையிலே தொழில்களை எடுத்து எப்படி எங்களால் நிர்வாகம் செய்யமுடியும்! ஆகவே அச்சம் வேண்டாம்!—இம் முறையில் பேசுகிறார். இரும்பு மனிதர் என்று புகழப்படும் சர்தார் தருகிறார் இந்தக் கரும்புச்சாறு, தொழிலரசர்களுக்கு, —கம்யூனிஸ்டுமீதும், காங்கிரஸ் ஊழியர்கள் மீதும், பாட்டாளிகள் மீதும் இரும்பு விழுகிறது, தொழிலரசர்களுக்கோ, கரும்புச்சாறு கிடைக்கிறது.

சர்ச்சில், கனல் கக்கும் முறையிலே முன்பு பேசியிருக்கிறார், சுயராஜ்யம் கேட்கிறீர்களே! ஆளத்தெரியுமா உங்களுக்கு—ஆளும் திறமை உண்டா—நிர்வாகம் நடத்திப் பழக்கமாகவில்லையே—படைபலம் இல்லையே—பகை நாடுபாய்ந்தால் தடுத்துக்கொள்ள சக்தியும் சாதனமும் இல்லையே—ஆகவே நீங்கள் சுயராஜ்யத்துக்கு இலாயக்கற்றவர்கள்—ஆகவே உங்கள் நன்மைக்காகவே, நாசத்திலிருந்து உங்களைத் தப்புவிக்கச் செய்யவே, பிரிட்டிஷார் ஆட்சி செய்கிறார்கள், என்று.

என்ன விதமான பதிலளித்தோம் அதற்கு! வீரம், தீரம், கெம்பீரம், தொனித்ததே அந்தப்பதிலில். ஆள முடிகிறதே. ஆசியாவின் பிரச்சினைகளைக் கூட அல்லவா கவனித்து ஆவன செய்யமுடியும் என்று இன்று ஆட்சியாளர்கள் கூறுகின்றனர்.

ஒரு பெரிய துணைக் கண்டத்தின் நிர்வாகப் பொறுப்பை ஏற்று நடத்தும் அறிவும் ஆற்றலும் நமக்குக் கிடையாது என்று ஆணவமாகப் பேசிய சர்ச்சிலுக்குச் சாட்டை தருவதிலே சர்தாராக இருந்த படேல் தொழிலரசர்களிடம், நிர்வாக நிபுணர்கள் எம்மிடம் இல்லை—திறமை இல்லை—ஆகவே துரைத்தனத்தார் தொழில்களை எடுத்து நடத்தாது, என்று கூறுவது! ஏன் பேசவேண்டும்? பேசக்கேட்டபோது, தொழிலரசர்கள் ஒருவருக்கொருவர் கண் சிமிட்டியும், கரம் கொட்டியும், களிப்பும் கர்வமும்கூட அல்லவா கொண்டிருப்பர். தொழிலரசர்கள், முன்பெல்லாம், பயந்து பயந்து பேசுவர், சர்க்காரே தொழில்களை எடுத்து நடத்துவது சரியானமுறை அல்ல தொழில்களை நிர்வகிக்ககூடியவசதியும் திறமையும், சர்க்காரிடம் இருக்காது" என்று — உடனே, பதில் கிடைக்கும் அவர்களுக்கு சவுக்கடி போல! இப்போது அவர்கள் அல்லவே, சர்தாரே கூறுகிறார்-எம்மால் நிர்வாகம் செய்யமுடியாது-திறமையும் வசதியும் இல்லை, என்று. இந்த முறையிலே பேசுவதும், இவ்விதமான போக்கும், நிச்சயமாக, பொதுமக்களிலே தீவிர நோக்கமுடையவர்களுக்கு கொஞ்சநஞ்சம் இருந்துவரு நம்பிக்கையும் நாசமாக்கவே உதவும்.

இரும்பு, தம்மீது விழும் என்று பயந்துகொண்டிருந்த தொழிலரசர்கள், இப்போது, இறுமாப்புடையவராக இருப்பரே!

விடுதலைப் போராட்டத்தின்

போது நமது தியாகமும் உழைப்பும் பயன்பட்டது; நமது கஷ்டமறிந்தவர்கள் ஆட்சிப்பீடம் ஏறிவிட்டனர், நாம் சுரண்டப்படும் விதத்தையும், நமது உழைப்பால் கொழுப்போரின் ஆதிக்கத்தையும் அவர்கள் நன்கு அறிவார்கள், எனவே நமக்கிழைக்கப்படும் கொடுமையைப் போக்க இவ்வேட்டைக்காடாக இன்றுள்ள தொழில்களை எல்லா சர்க்கார் உடைமையாக்கி, சக்திக்கேற்ற உழைப்பு, தேவைக்கேற்ற வசதி என்ற திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவார்கள் என்று நம்பிய பாட்டாளியின் மனம், இன்றைய ஆட்சியாளரின் போக்கைக் கண்டு பதறுது!

• • •

தொழிலாளர்கள், சிப்பந்திகள் ஆகியோரின் துயரத்தை நீக்க இந்திய சர்க்காருக்கு விருப்பம் இல்லை. என்பதும், அவர்களால் முடியவில்லை என்பதும் சென்ற சில மாதங்களாகத் தெரியவருகிறது. தொழிலாளர்கள் தங்களுடைய நிலைமையைச் சீர்திருத்திக்கொள்வதற்காக எடுத்துக்கொள்ளும் முயற்சிகளை முறியடிப்பது என்று இந்திய சர்க்கார் உறுதி கொண்டுவிட்டனர். அவர்களுடைய அடக்குமுறை பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற அடக்குமுறையைப்போன்றதல்ல. ஆனால் ஹிட்லர் கையாண்ட அடக்குமுறைகளைப்போன்றதாகும்.

இந்தியத் தொழிலாளர்களை முழுக்க முழுக்க அடிமைத் தொழிலாளர்களாக மாற்றிவிடுவதற்கான சட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன.

பணப் பெருக்கத்தை ஒழிப்பதற்காக வேகுசமீடத்தல் சர்க்கார் தயாரித்த கொள்கையானது முதலாளிகளுக்கு பெருவாரியான சலுகைகளை அளிக்கிறது. இது முதலாளி வர்க்கத்துக்குக் கிடைத்த பரிசு!

• • •

குழப்பம் விளைவித்து, பலாத்காரத்தைத் தூண்டிவிடும் கம்யூனிஸ்ட் பேச்சல்ல, மேலே பொறித்திருப்பது — கம்யூனிஸ்டுகளை ஒழித்தாக வேண்டும் என்று கூறும் ஜெயப்பிரகாஷ் நாராயணன் பேச்சுதான்! சர்க்காருக்கு வீணைச் சங்கடம் விளைவிக்கக்கூடாது, பொதுமக்களுக்கு தொல்லை தரக்கூடாது, உணவுப் பிரச்சினை உள்ளத்தைவாட்டும் இந்தச் சமயத்தில், ரயில்வே வேலை நிறுத்தம் செய்வது அடுக்காது, என்ற பொறுப்புணர்ச்சியுடன், நடந்துகொண்டு, வேலை நிறுத்தம் வேண்டாம் என்று கூறியுள்ள, ஜெயப்பிரகாஷ் நாராயணனே, இன்றைய ஆட்சியாளர்கள் தொழிலாளருக்குத்தரும் தொல்லையும், முதலாளிவர்க்கத்துக்குத் தரும் பரிசையும் எடுத்துக்காட்டி, வருத்தப்படாதிருக்க முடியவில்லை! ஆட்சியாளர்களின் போக்கைத் தமக்குச் சாதகமாக்கிக்கொள்ள கம்யூனிஸ்டுகளுக்கு இந்தப்போக்கு தாராளமாக இடமளிக்கிறது. இலாபம் குறையக்கூடாது! இலாப நோக்கத்தைக் குறைக்கக் கூடாது! எந்தச் சமயத்திலே சர்க்கார், தொழிற்சாலையை எடுத்துக்கொண்டுவிடுமோ என்ற பயமும் சந்தேகமும் இருக்கும் நிலை கூடாது. அத்தகைய சந்தேகத்தைப் போக்க சர்க்கார், திட்டமாக உறுதிகூற வேண்டும். இலாபத்திலே பெரும்பகுதியை வரியாகக் கொண்டுவிடக் கூடாது! இவ்வளவும் கேட்கிறார்கள் தொழிலதிபர்கள்—கிடைக்காவிட்டால், பணப் பெட்டியைப் பூட்டிவிடுவார்களாம், தொழில் செய்யமாட்டார்களாம்! இப்படிப் பேசுபவரின் இறுமாப்பை முறியடிக்கப் பயன்படுத்தப்படவேண்டிய சக்தியை, வறுமையால் தாக்கப்பட்டு நொந்திடக்கும் உழைப்பாளியின்மீது உபயோகிப்பதா, கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கு பரவாதிருக்கச் செய்யும் திட்டம்!

## செக்கோஸ்லோவேகியா

6-ம் பக்கத் தொடர்ச்சி

கம் ஒழிக என்று நீதிச் சொல்லைக் கூறுகிறோம். இதே நிலையில் பண்டார வகுப்பார் இருந்தால், பண்டார ஆதிக்கம் ஒழிக என்று இருக்கும் நமது போர்முழக்கம்—பார்சிகள் இதே காரியத்தைச் செய்ய முற்பட்டால், பார்ப்பன ஆதிக்கம் ஒழிக என்று கூறுவதற்குப் பதிலாக பார்சி ஆதிக்கம் ஒழிக! என்று முழக்கமிட்டிருப்போம்.

பகை, ஒரு வகுப்பாரிடம், துவேஷம் ஒரு ஜாதியாரிடம் என்பதா இதன் பொருள்! எப்படியோ, ஒரு ஜாதியார், ஒரு வகுப்பார், நமக்குப் பிடிக்காததும், நல்லறிவாளர்களால் கண்டிக்கப்படுவதும், மக்களின் அறிவையும் பொருளையும் சுரண்டுவதுமான, புரோகித ஆட்சியை நடத்திக் கொடுக்கும் நிலையில் உள்ளனர்—எனவேதான், நாம் அந்தப் புரோகித ஆதிக்கத்தை எதிர்க்கும் போது, அந்த எதிர்ப்பு, பார்ப்பன எதிர்ப்புப்போல, பார்ப்பனத் துவேஷம் போலத் தெரிகிறது.

எனவே, அநியாய வட்டி வாங்கிக் கொடுமை செய்யும் முறையை எதிர்க்கும்போது, யார், அந்த முறையை அதிகமாக முன்னின்று நடத்துகிறார்களோ, அவர்களைத்தானே குறிப்பிட்டுப் பேசத் தோன்றும். மார்வாடி ஆதிக்கம் ஒழிக! காபூலி ஆதிக்கம் ஒழிக!—என்று நாமே முழக்கம் எழுப்புகிறோம். காபூலி மீதும், மார்வாடி மீதும் துவேஷத்தைக் கிளப்புவதிலே நாம் ஏதோ—வை கண்டுகிறோம் என்று பொருள்! காபூலி காபூலிதும், மார்வாரி மார்வாரிதும் இருந்துகொண்டிருக்கும் நிலையிலே நாம், துவேஷ எதிர்த்திருக்கிறோம்! அவர்கள் இருந்து புகுந்த—புகுந்த இடத்தில் கிடைக்காமல்,—நாட்டு மக்களின் வாழ்வை நாசமாக்கும், அநியாய வட்டித் தொழிலை நடத்துவது கண்டோம், அந்த முறையை எதிர்க்கும் பணியில் ஈடுபட நேரிடுகிறது.

இந்த விளக்கம் நாசேனர் பெறவோ, சுற்றுத்திய அமைப்பு காரணத்தால், நாம் இன்று பார்ப்பன துவேஷி என்று கூறப்படுகிறோமே, அதேபோலத்தான், ஜெர்மன் கூட்டத்தார்மீது பழியும் குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டது.

சமயம் பார்த்துக்கொண்டிருந்தனர் ஜெர்மானியர், செக்கோ மக்களைச் சிதைக்க.

(தொடரும்)

## நாடகம்

6-3-49-ல் தோழர் C. P. இராசமாணிக்கம் எழுதிய "சூழ்ச்சிப் புயல்" என்ற நாடகம், காஞ்சிபுரத்தில், டாக்டர் A. கிருஷ்ணசாமி அவர்கள் தலைமையில் நடைபெறும்.




பெங்களூர், திருச்சி, கோயமுத்தூர். சேலம், கும்பகோணம், மாயவரம், காரைக்குடி, வேலூர். திருப்பாப்புலியூர். சிதம்பரம், புதச்சேரி, நாகர்கோயில், கோல்லம், திருச்சூர், செங்கோட்டை ஆகிய ஊர்களில் இப்போழுது நடைபெறுகிறது.

# மட மான்மியம்!

—❀—

[மடாலயங்களிலே உள்ள நிலையை விளக்கும் கற்பனைச் சித்திரம்.

மடாலயங்களின் அதிபர்களிலே, சிலர், ஒழுக்கக் குறைவாகத்தான் இருக்கிறார்கள்—என்பதை, மடாலய நிர்வாகமசோதாவை எதிர்க்கும் மகானுபாவர்கள் கூட ஒப்புக்கொள்கிறார்கள்.

அவ்வித மட அதிபர்களிலே ஒருவர் வாழ்க்கை எப்படி இருக்கிறது என்பதை விளக்கும், கருத்தோவியம் இது.]

1

இடம்:- கொலுமண்டபம்.
இருப்போர்:- மடாலய அதிபர் அதிபரின் தாசர் செல்வவான்.

மடாலய அதிபர்:- எவனொருவன் இந்திரியங்களெனும், துட்டக் குதிரைகளுக்கு அறிவெனும் கடிவாளமிட்டு அடக்கி, நன்னெறியெனும் பாதையிலே செலுத்துகிறானோ அவனே அரனடி எனும் திருத்தலத்தை அடைவான். இடையே இச்சை எனும் நச்சுக்கொடி கிடக்கும். பச்சென்று இருக்கிறதே என்றெண்ணினாலோ, சிக்கினோனைச் சீரழிக்கும். அதனைக் கடக்க வேண்டும். அதற்கு வி[illegible]சை எனும் சாட்டைகொண்டு குதிரையைத் தட்ட வேண்டும். மெய்யன்பனே! பரமன் அருள் பெற்றவர்களெல்லாம் இங்ஙனம் செய்தே முத்தி பெற்றனர்.

செல்வ:- ஆஹா! தன்யனானேன்! குருநாதா! உணர்ந்தேன்,

அதிபர்:- சைவநெறி அறிந்த சீலனே! பொன்னார் மேனியனைப் போற்று — போக போகாதிகளிலே இலயிக்கும் சுபாவத்தை மாற்று—பார், பிறகு, பாரிலே இன்பம்! பரமபதத்திலே எல்லையில்லா ஆனந்தம் தோன்றும்.

தாசர்:- சந்நிதானத்திடம், நமது பிள்ளைவாளுக்கு விசேஷ சிரத்தை. மடத்துக்கு ஏதேதோ செய்யவேண்டுமென்று நெடுநாட்களாக அவருக்கு அவா.

அதிபர்:- அம்பலவாணா! அவன் அருள் பெற்றவருக்கே அவ்வெண்ணம் உதயமாகும். மலட்டுமாடு மதுரமான பால் தருமா? நாம் கேள்விப்பட்டிருக்கிறோம், இவரைப்பற்றி,

செல்வ:- தங்கள் சித்தம் என்பாக்கியம். ஸ்வாமி என் சொத்து என்று ஒன்று உண்டா? எல்லாம் அவன் அருளால் வந்தது — அவனுக்கே சொந்தம்!

அதிபர்:- செல்வனே! உமது பக்தியை! உன் இஷ்டம்போல் ஏதேனும் கைங்கரியம், செய்.

தாச:- சந்நிதானம் உத்திரவு தந்தால், வசந்தமண்டபத்தைப் புதுப்பித்துக்கட்ட, பிள்ளையவாளுக்கு இஷ்டம்.

அதிபர்:- அதிலென்ன கஷ்டம்! செய்யட்டும்.

* * *

2

இடம்:- மடம் தாழ்வாரம்.
இருப்போர்:- தாசரும் தனவந்தரும்

தா:- பிள்ளைவாள்! நீர் ரொம்பவும் கொடுத்துவைத்தவர். இன்று சந்நிதானம் செய்த உபதேசம், அடா, அடா, அடா, அருமை, அருமை!

தனவ:- நால்வரின் பாடல்கள் அவர் நாவிலே, நர்த்தனமாடுகின்றனவே!

தா:- இன்று, தரிசனமும் விசேஷம். அலங்காரத்தைக் கண்டீரோ?

தனவ:- சொல்ல வேண்டுமா? சிவபழமாகத்தான் இருந்தார். சென்று வருகிறேன்.

* * *

3

இடம்:- தனி அறை

இருப்போர்:- மடஅதிபர் தாசர்.

அதிபர்:- காயா, பழமா?

தாசர்:- காயும் பழுத்துவிடும், இக்காவியின் கைபட்டால்!

அதி:- பழம், எவ்விடத்தது?

தா:- தோட்டம் அருகாமையில் தான்! ஆனால் வேலியும் காவலும் உண்டு!

அதி:- வேலியும் காவலும்! எவருக்குமா?

தா:- சந்நிதானத்துக்குத் தடை உண்டா? வசந்த மண்டபத்திலே, கனிகளைத்தேடாமல் விட்டது. கட்டளைபெற்றதன் எதிர்பார்த்து நிற்கிறோம். கனி, தங்க நிறம்! குளிரோ—அறியும் அருமை தங்கட்கே உண்டு.

அதி:- அம்மையப்பன் அருள் கலந்ததோ?

தா:- அம்மையப்பன் மருள்விளம் பிற்று—கொஞ்சம் பொருள் செலவு செய்து மருளைப் போக்கிவிட்டோம். கனி, வைணவம்.

அதி:- அரியும் சிவனும் ஒன்று!

தா:- லாவண்யவதி!

அதி:- உனக்கா தெரியாது!

தா:- வஞ்சிக்கொடி!

அதி:- கஞ்சிராதே!

தா:- குசத்தால் அடிபட்ட தலைவே! பக்குவமாகப் பதித்து வந்திருக்கும் பாரிஜாதம்.

அதி:- பெயர்?

தா:- விலைமோகினி, என்று விட்டார் பெயர் சூட்டவில்லை—நாங்கள் சூட்டலாம்-பொருத்தமாக இருக்கும் — அவர்களிட்ட பெயர் அம்சா.

அதி:- அம்சா! அழகான பெயர்! வசந்த மண்டபத்திலே சகல ஏற்பாடுகளும் செய்துவிடு. ரசபானங்கள் குறைவின்றி இருக்கட்டும். அம்சா! என்ன லாவண்யமான நாமதேயம்! என்னதான் அலங்காரம் செய்துகொண்டு சென்றபோதிலும், இத்தச் சடையும் முடியும் சனியனாக வன்றோ இருக்கும், விட்டகுறை தொட்டகுறை போல! கன்னியின் கண்ணும கருத்தும் கலங்குமோ, கச்சிஏகம்பா!

தா:- இரவுவந்து காண்கிறேன்

அதி:- நல்லது! சென்றுவா! செலவுக்கு?

தா:- பெற்றுக் கொண்டேன்.

**அதி:-** இக்கணம் வேண்டாம்; சற்று தாராளமாகவே சொட்டு—புதிய பாத்திரம்!

* * *

4

இடம்:- வசந்தமண்டபம்.

இருப்போர்:— அதிபர்
அப்சரா.

**அதி:-** வர்ணனையைவிட வஸ்து விசேஷமாகத்தான் இருக்கிறது. சொர்ணபிம்பமே! உட்கார் இப்படி! நெடுநேரம் நின்றால் உன் மலரடி கசங்கிவிடும்.

**அப்:-** இந்தக்கண்களைவிடவா?

**அதி:-** கண்களுக்கென்ன........?

**அப்:-** தாங்கள், எப்போது வருவீர் வருவீர் என்று பார்த்துப் பார்த்துக் கிடந்து கண் பூத்துப்போய்விட்டது.

**அதி:-** பார்த்தபின் என்வேஷம்?

**அப்:-** சிவலோக நாதனைக் கண்டதுபோலிருக்கிறது.

**அதி:-** சிங்காரி! உன்னைக்காண காலைமுதல் நான் தவித்துக்கிடந்தேன். மடத்திலேயோ பண்டாரசாமிகள் வருவதும் போவதும் ஓயவில்லை. என்மனமோ அங்கு தங்கவில்லை.... ............மோகனாங்கி!..............

**அப்:-** சுந்தரரூபா!

**அதி:-** என் கண்மணி!

**அப்:-** கண்ணின் ஒளியே!

**அதி:-** கனியே!

**அப்:-** இதோ தங்களுக்கென்று கனிரசம், தங்கக்கோப்பையிலே கொண்டுவந்திருக்கிறேன். தயவு செய்து, பருகுங்கள்.

**அதி:-** உன் பவளவாயைவிடவா அந்தக்கோப்பை வசீகரமானது! உன் இதழ் சுவைப்பதைவிடவா, அந்தக் கனிரசம் இன்பந்தரும்..........

**அப்:-** பாட்டு, ஏதாகிலும் பாடட்டுமோ?

**அதி:-** இசைகூடத் தெரியுமோ? எங்கே சிக்ஷை?

**அப்:-** பண்ணையூர் பார்த்தசாரதி ஐயங்காரிடம் ஐந்துவருஷம் பாடம் அடியாளுக்கு.

**அதி:-** ஓஹோ! பண்ணையூர்ஐயங்காரா? அவரிடம் பாடம் கேட்ட பத்மா, என்றோர் பெண் உண்டே, தெரியுமா?

**அப்:** ஆமாம், ஒல்லியாக, சிகப்பாக இருப்பாள்.

**அதி:** நல்ல இலட்சணம்!

**அப்:-** மூக்கிலே களை இருக்காதே.

**அதி:-** உன்முகமாகுமா அவளுக்கிருப்பது! நான் கண்ட பதுமைகளிலே, நீயே முதல்தரமானவள்!

**அப்:-** எல்லாம் விடியுமட்டும்பேசுவீர். பிறகோ.........

**அதி:-** என்ன செய்வது! காலை பூராவும் சைவத்தைச் சுமந்து தீர வேண்டியிருக்கிறது.

❀

15-ம் பக்கத் தொடர்ச்சி

பிறரிடம் பொருள் பெற்றோ, திருப்பணி செய்வது முறை.

தீயமுறையிலே பொருள் ஈட்டி நடத்தும் திருவிழாவைக் காணும் போது, நாம் என்ன எண்ணுகிறோம், இன்று!

கருப்புச் சந்தையிலே காசு பெற்றதை மறைக்க, வெளிச்சம் அதிகமாகப் போடுகிறான் வேலாயுதம்!— என்று பேசுகிறோமல்லவா?

திருப்பணி முக்கியம் என்று கூறுவர்—சரி—ஆனால் அதனைச் செய்வதற்குத் திருநெறியும் வேண்டாமோ என்று கேட்கிறோம்.

புத்தாலயத்திலே புகுந்து பொருள் எடுத்துத்தானா, பூலோக வைகுந்த நாதனுக்குத் திருப்பணி செய்ய வேண்டும்? புத்தாலயத்திலே உள்ள புனிதத் தன்மையையோ, புத்த மார்க்கத்தையோ, வைணவ ஆழ்வார், மதிக்கவேண்டியதில்லை—ஆனால், கொள்ளை அடித்தல் தவறு, தீது, பாபகாரியம் என்ற நீதியையாவது கவனிக்கக்கூடாதா! ஏ! பாபஸ்வரூபமே! பக்தியில் ஈடுபட்ட ஆழ்வாருக்கு, களவு, கொள்ளை, என்பன போன்றவைகளைப் பற்றிய சாமான்ய கருத்துகளைக் கவனிக்க முடியுமோ! அவருடைய மனமெல்லாம் எம்பெருமானுக்கு எப்படிச் சேவை செய்வது என்ற ஒரே நோக்கத்திலே இலயித்திருந்தது—அந்தப் பக்தியின் மேம்பாட்டை நீ, என்ன அறிவாய்!— என்று கோபத்துடன் கேட்கும் திருநாமதாரிகள் உள்ளனர், அறிவோம்—ஆனால், கொள்ளையடித்துப் புண்யம் தேடுவதும், பிறர் மனம் பதறப் பதறக், காரியம் செய்து, அதன் மூலமாகவே கடவுள் அருளைத் தேடுவதும் முறையா, எப்படிப்பட்ட பக்தருக்கும் என்று கேட்கிறோம்.

திருமங்கை ஆழ்வார், திருவரங்கத்தாருக்குத் திருப்பணி செய்யவேண்டிய அவசியத்தை அறிந்ததும், அனைவருக்கும், அறிவித்துப் பொருள் திரட்டி இருக்கலாம். பூபதிகளிடம் சென்று பொருள் திரட்டலாம்—மற்றோர் மார்க்கத்தாரின் மகிமை ஸ்தலத்தைத்தானா கொள்ளையிட வேண்டும்.

திருப்பணி செய்யும் நோக்கத்துடன், கொள்ளை அடித்தால், பாபமில்லை, அதே நோக்கத்துடன், வேறு மார்க்கத்தவரின் புனித ஸ்தலத்தை நாசமாக்கினால் பாபமில்லை, என்று காட்டுவதுதானே, திருமங்கை ஆழ்வார் புரிந்த இந்தச் செயலின் பொருள். இந்தக் கருத்து ஏற்படும் விதத்திலே, நமது புண்ய கதைகள் இருக்கலாமா? சட்டம் இப்போது இதனை அனுமதிக்காது — ஆனால் திருமங்கை ஆழ்வாரின் போக்கிலே, இந்தப் பகுதியை, இன்றைய பகுத்தறிவுக் கண்கொண்டு கவனிக்க மறுத்து, பழைய பக்தர் சுபாவத்துடனேயே பார்த்து, பாகவதசிரோமணிகள் அவர் புகழ் பாடிடக் கேட்டுப் பூரித்து, யாரேனும் நாமும், ஏதாவது, நமது சக்தியானுசாரம், செய்யலாமா, என்று ஆசைப்பட்டால், சமூகம் என்ன கதியாவது? இதனால்தான், பழைய கதைகளைக் கொண்டு, அவைகளிலே காணப்படும் நியாயங்களை, நடவடிக்கைகளை முறைகளைக் கொண்டு, இன்றைய நாட்களிலே, பக்தர்கள் உட்பட யாரும், நடந்துகொள்ள முடியாது, எனவே, வீணாக, அந்தக் கதைகளை மனதிலே சுமந்துகொண்டிருக்க வேண்டாம், இன்று தேவைப்படும், நீதிகளுக்கு ஏற்ற கருத்துக் கிடைக்கும் வகையிலே, மனப்பான்மையைத் திருத்தி அமையுங்கள், என்று வலியுறுத்துகிறோம்.

மார்க்கப் பூசல்களின் போது நடைபெற்ற நாசவேலைகள்—மதப் பற்றுக் காரணமாக நடைபெற்ற அசாதாரணச் சம்பவங்கள், அறிவுக்குப் பொருந்தாத நடவடிக்கைகள்,

(4-ம் பக்கம் பார்க்க)

# கோயிலை இடித்த பக்தர்!

★

பக்தர்கள், பதறி, அழுகிறார்கள் ஓர் ஊரில்.

வேறோர் ஊரில், பக்தர்கள், பரமானந்த மடைகிறார்கள்.

நாத்திகன் எவனோ நாச காரியம் செய்துவிட்டானே, என்று நெஞ்சு நெக்குருகப் பேசிக்கொண்டிருக்கின்றனர், ஓர் ஊரில், பக்தர்கள்.

வேறோர் இடத்திலே, இந்த ஆத்திகச் சிகாமணியின் அரிய சேவையின் பெருமையைக் கூற ஆயிரம் நாவுடைத்த ஆதிசேஷனாலும் முடியாது, என்று வியந்து பேசுகிறார்கள் பக்தர்கள்.

இடியுண்ட கோயிலைக் கண்டு இப்படியும் அக்ரமம் நடைபெறலாமா, என்று அழும் பக்தர்கள் ஓர் ஊரில்.

புதிய கோயில் திருப்பணியைக் கண்டு பூரிப்படையும் பக்தகோடிகள் வேறோர் ஊரில்.

உன் பெருமையை, மகிமையை, புனிதத்தன்மையை, அறியாது, இந்தப் பழிச்செயலை, பாபச்செயலைச் செய்யத் துணிவு பிறந்ததே! தூயவனே! மக்கள் துயர்கண்டு, அவர்கள் உய்யும் வழி கண்டறிந்துரைத்த உத்தமனே! சத்திய நெறியினைச் சாற்றிய நித்ய ஜோதியே! உன் ஆலயத்தை இக்கதியாக்க, மாசுபடுத்த, துணிவு பிறந்ததே! என்ன மனம் இது! எவ்வளவு தீய செயல்! பாப காரியம்! என்ற கண்டனம் ஓர் ஊரில்.

உன் பெருமையை, மகிமையை உணர்ந்த உத்தமன், இந்தப் புண்ய காரியத்தை, திருப்பணியைச் செய்ய முற்பட்டதற்கு, நாங்கள், எவ்வளவு பாராட்டினாலும் போதாதே! மூலவனே! மூவரில் முதல்வனே! மூடாத்மாக்கள் அறியார் உன் மூர்த்திகர விசேஷத்தை! ஞானியான அவர் அறிவார்—எனவேதான், உமக்குத் திருத்தொண்டு புரிய முன்வந்தார்! அவர் திருவடிகளைப் போற்றுகிறோம். அவர் திருப்பாதத்தை வணங்குகிறோம், என்று வாழ்த்தினர், பக்தர்கள், வேறோர் ஊரில்.

* * *

பாபகாரியம்! புண்ய காரியம்!
தீயசெயல்! திருத்தொண்டு!
நாசவேலை! நல்லவேலை!
நாத்திகன்! நமது குருநாதன்!

இவையாவும், ஒருவருக்கே, கிடைத்த வரிசைகள்!

ஒரு ஊரில், அவர் தூற்றப்பட்டார்.

வேறோர் ஊரில் அவர் துதிக்கப்பட்டார்.

ஒரு ஊரில் அவர் கோயிலை இடித்தார்—களவாடினார்.

வேறோர் ஊரில் அவர் கோயில் கட்டினார் — திருப்பணி செய்தார்.

அவர் நாத்திகன் ஆகவேதான் நாதனின் ஆலயத்தை நாசமாக்கினார் என்று கண்டித்தனர். நாகப்பட்டினத்தில்.

அவர் ஆஸ்திகர் ஆகவேதான் அவர் ஆலயத் திருப்பணியை அரும்பாடுபட்டுச் செய்து முடித்தார், என்று அவரைப் பாராட்டினர், திருவரங்கத்தில்.

அவரைக் கண்டித்தவர்கள், கடவுள் நெறி மறந்தவர்களல்ல.

அவரைப் புகழ்ந்தவர்களும், கடவுளின் அன்பர்களேதான்!

பக்தர்களிலே, ஒரு சாராரை மகிழ்விக்க, மற்றோர் சாராரை மனம் வேகும்படிச் செய்ய நேரிட்டது.

ஓரிடத்தில் தேவாலயத் திருப்பணி செய்வதற்காக, இன்னோர் இடத்திலே தேவாலயத்தை இடித்தார், பொருளைக் கொள்ளையடித்தார்.

நாகப்பட்டினத்திலே, இருந்த புத்தர் கோயிலை நாசமாக்கி, அங்கிருந்து கொள்ளை அடித்துக் கொண்டு போன பொருள்களைக் கொண்டு, திருவரங்கத்தில், விஷ்ணுவுக்குத் திருப்பணி செய்தார், திருமங்கை ஆழ்வார்!

அவருடைய பகவத் சேவை, அவருக்கு ஆழ்வார் பட்டத்தைத் தந்தது. பக்தியினால் அவர் முக்தி பெற்றது மட்டுமல்ல. இன்றும், வைணவர்களின், தொழுகைக்கு ஏற்றவராகக் கோயில்களில் இருக்கிறார்.

அவர், நாசம் செய்த கோயிலிலே இருந்த புத்தர், கடவுளின் விரோதியல்ல — பதற்றவரல்ல — புனித மார்க்கத்தைத் துவக்கியவர்—பூபதிகள் பலரைச் சீடராகக் கொண்டவர்—அந்த ஆலயத்தைத்தான் திருமங்கை ஆழ்வார், நாசமாக்கினார்—திருவரங்கநாதனின் திரு அருளைப் பெற!

நாகப்பட்டினத்தில் புத்தராலயத்தை இடித்துத் தள்ளிய விஷயத்தைமட்டும் நீக்கி விட்டு, அல்லது மறைத்துவிட்டு, திருமங்கை ஆழ்வார், திருவரங்கநாதருக்குச் செய்த திருப்பணியை மட்டும் கவனித்தால் ஆழ்வாரின் அரிய சேவையைப் பாராட்ட வைணவர்கள் மார்தட்டிக் கொண்டு முன்வர, உரிமை தாராளமாக உண்டு.

தான் வணங்கும் தெய்வத்துக்குத் தன்னாலான — தன சக்திக்கு மீறிய தொண்டு செய்யும் போது, அப்படிப்பட்டவரை, போற்றுதிக்க, அந்த மார்க்கத்தவர் முன்வருவது முறை—நியாயம்.

ஆனால் திருமங்கை ஆழ்வாரின் திருத்தொண்டு நியாயமானது, பெருமைக்குரியது என்று, அவர், அதே திருத்தொண்டினைச் செய்ய, புத்தராலயத்தைக் கொள்ளையடித்த விஷயத்தை மறவாமலிருக்கும் நிலையில், யார், கூறமுடியும்—கூறுபவர்களை, யார், நேர்மையாளர், என்று சொல்ல முடியும்.

ஆலயம் கட்டுவது, திருப்பணி புரிவது ஆகியவைகள் பக்தி மார்க்கத்துக்குத் தேவை என்றால், அந்தப் பணியினைச் செய்ய, பாடுபட்டுப் பிழைத்து, பணம் சேகரித்துச் செய்தல் போற்றுதலுக்கு உரியதா — வேறோர் மார்க்கத்தாரின் புனிதஸ்தலத்திலே புகுந்து களவாடி, திருப்பணி செய்வது போற்றுதலுக்கு உரியதா, என்பதை, பக்தி, கடவுள் நெறி, புனிதத் தன்மை, என்றால், அவை வைணவர்களுக்கு எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியந்தானே பௌத்தர்களுக்கும், என்ற நியாயத்தை மறவாதிருக்கும் மாண்புள்ளவர்களைக் கேட்கிறோம்.

தன் பெருமைக் கொண்டோர்,

(14-ம் பக்கம் பார்க்க)

# வா ழ் க் கை ப் பு ய ல்.

சமுதாயச் சீரழிவின் காரணவிளக்கம் காட்டும்
சிறு கதைகளின் தொகுப்பு!

உள்ளம் ஊழலாகக் காரணம் என்ன என்பதைக்
கண்டறிய உதவும் ஏடு.

[C. N. அண்ணாத்துரை தீட்டியது.]

குற்றவாளிகளைத் தண்டித்தால் மட்டும் போதாது, சமுதா
யத்தின் நோயைப் போக்க மருந்திடவேண்டும் என்ற
புத்தறிவு புகட்டும் புதிய நூல்.

தூதாடி — ஆனால்
கள்ளன்
கொலைகாரன் — இவர்கள்
கைதி — அனைவரும்
விபசாரி — மனிதர்களே!

ஏன்
அவர்கள் குற்றவாளிகளாயினர்?
பிறவி வேறு!
மானிடர்தான்!
எனினும்
அவர்கள் கெட்டவராயினர்!!
ஏன்?

## வாழ்க்கைப் புயல்

இவைகளுக்கு விளக்கம் தருகிறது ஒவ்வொருவரிடமும்
இருக்கவேண்டிய நூல்.
டிம்மி சைஸ் 56 பக்கங்கள் கொண்டது.
அழகிய இருவண்ண அட்டையுடன் உள்ளது.

விலை 0—12—0

**பரிமளம் பதிப்பகம்**

சின்ன காஞ்சிபுரம்.

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press,
95. Tirukkachinambi Street. Kancheepuram.